## அரசு ஊழியர்

நபம்பர் 2017

மலர் : 38 இதழ் : 11

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


**சூடா ஒரு கோப்பை சூப்**

# கோழையின் வாக்கு

பனி விழும் வேளையில்
களைகளை நீக்கு
அழிவிலும் இழிவிலும்
வெளிவரும் வீரம்
உளிவிழும் சிற்பமாய்
வலிகளைப் போக்கு
தலைவிதி என்பது
கோழையின் வாக்கு!

- இந்திரன்

# அநீதிக்கு எதிராக அணிதிரள்வோம்!

***ஜா***க்டோ-ஜியோ போராட்டம், நீதிமன்றம் தீர்ப்பு தந்த நெருக்கடி, ஊதியக்குழு தனது அறிக்கையை அவசர அவசரமாக தயாரித்து, அரசுக்கு சமர்ப்பித்து, அதனை பரிசீலனை செய்த அரசும் அவசர அவசரமாக, அரசு ஊழியர் ஆசிரியர்களின் நலனை புறந்தள்ளி விட்டு அரசாணையும் வெளியிட்டது. இது ஒருபுறம் இருந்தாலும் ஊதியக்குழு அறிக்கையை வெளியிட்டது உண்மையில் நமது போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். நாம் பெற்ற வெற்றியை குறைத்து மதிப்பிட முடியாது. நமது உழைப்பும், குன்றாத உணர்வுமே அதற்கு அடித்தளமாகும்.

நீதிமன்றத்தில் அரசு தலைமை வழக்கறிஞர் "ஊதியக்குழு அறிவிக்க ஆறு மாத காலம் தேவைப்படும்" என்று தெரிவித்த கருத்துக்கு மாறாக, முன்கூட்டியே ஊதியக்குழு அறிக்கையை கொண்டு வந்தது நமது வரலாறு காணாத வெற்றியாகும்.

ஆனாலும் இந்த வெற்றியை முழுமையாக கொண்டாட முடியவில்லை. ஏன்? மத்திய அரசுக்கு இணையாக என்ற வார்த்தை 'மாயாஜாலம்" என்றே கருதலாம்.

21 மாத ஊதிய நிலுவைத் தொகை மறுப்பு, ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் ஊதிய முரண்பாடுகள் தீர்க்கப்படாதது, மத்திய அரசுக்கு இணையான படிகள் வழங்காதது, புதிய ஊதிய முரண்பாடுகளை உருவாக்கியுள்ளது, குறைந்த பட்ச ஊதியம் 26,000 அனுமதிக்காதது, மத்திய அரசுக்கு இணையாக குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்காதது, புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்வது குறித்து அறிவிக்காதது, தொகுப்பூதியம், தினக்கூலி ஆகியோருக்கு வெறும் 30 சதவீதமே உயர்த்தியுள்ளது என பன்முனை தாக்குதல் மூலம் இவ்வரசு, அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் கடுமையாக வஞ்சித்துள்ளது.

கொடுமை என்னவென்றால், காலம் காலமாக கொத்தடிமை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, ஊராட்சி செயலாளர், வருவாய் கிராம உதவியாளர்கள் போன்றோரின் வாழ்வாதார எதிர்பார்ப்பினை முற்றிலும் தமிழக அரசு சிதைத்து விட்டது. அவர்களுக்கு கண்ணீரைத் தவிர ஏதும் மிஞ்சவில்லை. முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களின்

சட்டமன்ற அறிவிப்பை அந்த கட்சியின் அரசே மெரினாவில் புதைத்துவிட்டது.

இதே போன்று தனது அதிகாரத்தை மீறி, படித்த இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் "பணியாளர்கள் சீரமைப்பு" என்ற பெயரில் அரசுத் துறை பணியிடங்களில் அவுட்சோர்சிங் முறையில் நியமனம் செய்யலாம் என பரிந்துரைத்துள்ளதை ஏற்க இயலாது.

நீதிமன்றம் தலையிட்டதால் ஜாக்டோ-ஜியோ பேரமைப்பின் வேலைநிறுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது என்பதை நாம் மட்டுமல்ல, நீதிமன்றமும் அறியும். "ஊதியக்குழு" எனும் அலுவலர் குழு, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இழைத்துள்ள அநீதியை அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் விசாரணையின் போது, மேற்கண்ட அநீதிகளை அளிக்கவுள்ளோம். நீதிமன்றத்தின் மேலாண்மையை நிலை நாட்டுவதற்கு நீதிமன்றம் முயல்வது போன்று, நியாயத்தின் பேரில் சங்கத்தின் மேலாண்மையையும், ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளையும் வென்றெடுக்க நாம் வீதிமன்றங்களில் அணி திரள்வோம். ❖

## AISGEF 16வது அகில இந்திய மாநாடு வெற்றி பெற இன்று முதல் களப்பணியாற்றிடுவோம்!

நாடு முழுவதும் உள்ள ஒரு கோடி மாநில அரசு ஊழியர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு மட்டுமல்லாது தேச ஒற்றுமையைப் பாதுகாப்பதிலும், தேச பொருளாதாரத்தை மேம்படுத்திடவும், இந்திய நாட்டின் தொழில்களும், வணிகமும் பாதுகாக்கப்படவும் அயராது குரல் கொடுத்து வரும் இந்திய நாட்டின் ஒரே மிகப்பெரிய அமைப்பான அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16வது தேசிய மாநாடு 2018 ஏப்ரல் 6 முதல் 9 வரை சென்னையில் நடத்தும் பெருமைக்குரிய அரிய வாய்ப்பு தமிழ்நாட்டிற்கு கிடைத்துள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பொறுப்பேற்று இம்மாநாட்டினை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது. இம்மாநாட்டிற்கு இந்தியா முழுவதிலுமிருந்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். இம்மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கான உதவிகளை பல்வேறு அமைப்புகளை சார்ந்தவர்கள் மனமுவந்து செய்து வருகிறார்கள்.

கடந்த 2002ஆம் ஆண்டு டிசம்பர் 27 முதல் 30 வரை சென்னையில் நமது அமைப்பு பொறுப்பேற்று 11வது அகில இந்திய மாநாட்டினை நடத்திய பின்புலத்தில் உலகத் தலைவர்களின் வருகையை நாடு முழுவதுமுள்ள இதர தொழிற்சங்க, தோழமை சங்கத் தலைவர்களை வரவேற்று உபசரிப்பது உள்ளிட்ட பிரதான கடமைகளோடு, பிரதிநிதிகள் மற்றும் பார்வையாளர்களை 4 நாட்கள் வரவேற்று உபசரித்து வழியனுப்பும் கடமையினையும் நிறைவேற்றிட நிதி செலவினம் என்பதும் இன்றைய விலைவாசி மற்றும் ஜி.எஸ்.டி. இவற்றோடு தோராயமாக கணக்கீடு செய்தால் ஒரு கோடி ரூபாய்க்கும் மேலாக நிதி தேவை.

அதனடிப்படையில் 2016ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அடிப்படையில் உறுப்பினர் ஒருவருக்கு ரூ.100 வீதம் நிதி சேகரிப்பில் ஈடுபட்டால் ஒரு கோடி என்பது நமது ஸ்தாபன பலத்திற்கும், செல்வாக்கிற்கும் எளிதான ஒன்றாகும். 2002 அகில இந்திய மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய அனுபவம் உள்ள வடசென்னை, தென்சென்னை மாவட்டங்களுக்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.200 வீதம் நிதி சேகரிப்பு செய்தல் அவசியமாகும்.

இவற்றை நிறைவேற்றிட களப்பணியாற்ற இன்று முதல் தயாராவோம்!

மாவட்ட வாரியாக நிர்ணயித்துள்ள இலக்கை வெற்றிகரமாக முடித்து மாநாட்டை சிறப்புடன் நடத்திட இன்று முதல் அனைவரும் தயாராவோம்!

**நாள்:**
**ஏப்ரல் 6 - 9 2018**

**இடம் :**
**சென்னை**

# வாதாடிப் பெறுவோம், அன்றின், போராடி எடுப்போம்!

## தடைகளை உடைக்கும் ஜாக்டோ-ஜியோவின் இடைவிடாத போராட்டங்கள்

எங்கள் ஆட்சியாளர்கள்
அதிகார வர்க்கத்தினருக்கு
கூட்டல் கணக்கையும்
எங்களுக்குக்
கழித்தல் கணக்கையும்
மட்டுமே கற்றுத் தந்தார்கள்!

**- (மூலம்) கந்தர்வன்**

**மறுக்கப்படும் நிலுவைத் தொகை, உழைப்புச் சுரண்டலுக்கான புதிய அத்தியாயம்!**

13.10.2017க்குள் தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு ஊதியமாற்றம் ஏற்படுத்த வேண்டும், இல்லாவிட்டால் இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும் என்ற உயர்நீதிமன்றத்தின் கண்டிப்பான உத்தரவிற்குப்பிறகு 11.10.2017ம் தேதி தமிழக முதல்வர் ஊதிய மாற்றத்தை அறிவித்துள்ளார். 21 மாத காலதாமதத்திற்குப் பிறகு அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஊதிய மாற்றத்தில், தொடரும் முரண்பாடுகளும், தீர்க்கப்படாத குளறுபடிகளும் நிறைந்துள்ள நிலையில், ''21 மாத நிலுவைத் தொகை வழங்கப்படமாட்டாது'' என்ற அறிவிப்பு அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. நடப்பது ஜனநாயக முறைப்படியான அரசுதானா? அல்லது கொத்தடிமை கூலி முறையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் உழைப்பை சுரண்டும் கொடுங்கோல் ஆட்சியில் சிக்கிக்கொண்டோமா? என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது ஊதியமாற்ற அறிவிப்புகள்.

**ஏற்கெனவே நிகழ்த்தப்பட்ட அநீதி!**

2006ல் ஏற்படுத்தப்பட வேண்டிய 7வது ஊதிய மாற்றம் 2008ல் ஏற்பட்டது. அப்போதும் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் 12 மாதங்கள் தங்கள் நிலுவைத் தொகையை இழக்கும்படியான அநீதி நிகழ்த்தப்பட்டது. மேலும் அந்த ஊதிய மாற்றத்தில், வரலாறு காணாத முரண்பாடுகள் கண்டறியப்பட்டு அதைக்களைய முறையீடுகள், போராட்டங்கள் என பலவிதமான பகீரத பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், அரசாங்கம் முரண்பாடுகளைக் களைய ஒரு நபர் குழு, குறை தீர்க்கும் குழு என குழுக்கள் அமைத்து கண்துடைப்பு நாடகங்கள் நடத்தி, காலவிரயம் செய்து மேலும் மேலும் ஊதிய முரண்களை ஏற்படுத்தி அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் அவர்கள் நியாயமாக, சட்டப்படி பெறவேண்டிய கௌரவமான ஊதியத்தை பெறவிடாமல் ஆகாயத்துற்கும் பூமிக்கும் பந்தாடின. பத்தாண்டுகள் முடியும் தறுவாயிலும் ஊதிய முரண்பாடுகள் சரி செய்யப்படாத நிலையில், 8வது ஊதியமாற்றத்திற்கான காலம் நெருங்கி வருவதை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்ற போது, அரசாங்கம் உண்மையான அக்கறையோடு பிரச்னையை அணுகாமல் நம்பிக்கை துரோகம் எனும் நயவஞ்சக வலையில் நம்மை தொங்கவிட்டது.

**நயவஞ்சக நாடகத்தின் நாற்புறங்கள்!**

7வது ஊதிய மாற்றத்தில் அடிப்படை ஊதியம் மற்றும் தரஊதியம் தவிர்த்து பெரும்பாலான சலுகைகள் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையானதாக இல்லாததோடு மட்டுமல்லாமல் மிகவும் குறைவானதாகவும் இருந்தது. சங்கங்களும் அதன் தலைவர்களும், இணையான படிகள் கேட்டு கொடி பிடிக்காமல் இருக்கும் பொருட்டு அவர்களை திசை திருப்ப, ஊதிய மாற்றத்தில் ஊதியம் நிர்ணயிப்பதிலேயே முரண்பாடுகளை உண்டாக்கி ஊழியர்களுக்குள்ளேயே மோதல்களை ஏற்படுத்தும் அளவிற்கு மேல்பதவிகளில் உள்ளவர்களின் சம்பளத்தை கீழ்பதவிகளில் உள்ளவர்களின் சம்பளத்தைவிட குறைவாக்கி குளறுபடிகளை ஏற்படுத்தி, சங்கமும் அதன் தலைவர்களும் அந்த தவறைச் சரிசெய்யவே அரசாங்கத்திடம் முட்டிமோதிக்கொண்டிருக்கும் தந்திர வேலையை அரசு செய்தது. அதனால் மத்திய அரசுக்கு இணையான படிகளைப் பெறுவதில் முனைப்பும், அழுத்தமும் கொடுக்க முடியாமல் சங்கத் தலைவர்கள் அலைகழிந்தார்கள். ஊதிய முரண்களை சரி செய்வதற்காக போராடி பெற்ற ஒரு நபர் குழுவும் நம்பிக்கை துரோக நாடகத்தின் ஒரு சிறு பாத்திரமாக அங்கம் வகித்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை சரி செய்வதாக பாசாங்கு செய்து, இது, ஏற்கெனவே இருந்த ஊதிய முரண்களை இன்னும் பெரிதாக்கி விட்டது.




இதனை சரி செய்ய மீண்டும் சங்கத் தலைமையும், ஊழியர்களும், ஆசிரியர்களும் அணிதிரண்ட பின்னர் குறை தீர்க்கும் குழு அமைக்கப்பட்டது. இதுவும் அரசாங்கம் நடத்தும் ஓரங்க நாடகத்தின் இன்னொரு கதாபாத்திரம் என்பது ஆரம்பத்திலேயே தெரிந்துவிட்ட போதிலும் தொடக்கத்திலேயே மறுக்கவும் எதிர்க்கவும் முடியாத

நிலையில் சங்கங்கள் தடுமாறின. பலகட்ட போராட்டங்களுக்குப் பின்னர் 2010ல் 89 அரசாணைகள் வெளியிடப் பட்டன. அதிலும் கூட அநேக முரண்கள். ஐஏஎஸ் அதிகாரிகளைவிட ஐந்தாம் வகுப்பு மாணவனே தேவலாம் என்கிற அளவுக்கு மோசமான கணக்கீடுகளுடன் ஊதிய முரண்பாடுகளை உயிரோட்டப் படுத்தியிருந்தார்கள் அதிகாரிகள்.

**புதிய மொந்தையில் பழைய வஞ்சம்!**

2011ம் ஆண்டில் ஜெயலலிதா அம்மையார், ''அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் புதிய பென்சன் திட்டம் திரும்ப பெறப்படும், ஊதிய முரண்பாடுகள் களையப்படும்.'' என்று தேர்தல் அறிக்கையில் தெரிவித்தது, அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக இருந்தது. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் 2015 வரை இதைப்பற்றி ஜெயலலிதா கண்டுகொள்ளாமலேயே மௌனவிரதம் இருந்தார்.

**சட்டசபை சூழ்ச்சிகள்!**

ஊதிய முரண்பாடுகளை தீர்க்கச் சொல்லியும், 2006 ஜனவரி முதல் டிசம்பர் வரை மறுக்கப்பட்டிருந்த நிலுவைத் தொகையை வழங்கக் கோரியும் சங்கங்கள் கொடுத்த முறையீடுகளை பெற்றுக்கொண்ட அரசு, இதற்கான பதிலை நிதியமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் மூலமாக சட்டமன்றத்தில் வரவு செலவு திட்ட உரையில் தெரிவித்தது. 2014ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் 2014-15ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட உரையை நிதியமைச்சர் வாசித்த போது, ''2016-17 ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள நடைமுறைப்படுத்தப்படும் என கருதப்பட்டுள்ளது. முந்தைய ஊதியக்குழுக்கள் போலன்றி, இக்குழுவின் பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப் படுத்தப்படும் எனவும் பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத்தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாது எனவும் கருதப்பட்டுள்ளது.'' என்றும், ஊதிய மாற்றத்திற்கு முன்பாக ஊதிய முரண்பாடுகள் சரி செய்யபடும் என்றும் அடுக்கடுக்கான உறுதிமொழிகள் கூறினார். 21 மாதம் காலம்கடந்து அலுவலர் குழுவின் பரிந்துரைகள் தற்போது பெறப்பட்டு ஏற்கப்பட்டிருப்பதோடு, ''பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத்தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாது'' என்பதற்கான உண்மையான விளக்கம் என்ன என்பதும் இப்போது அனைவராலும் உணரப்பட்டுள்ளது.

**வரையறுக்கப்பட்ட ஊதியம் இன்னும் கிடப்பில்!**

சத்துணவு பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம பஞ்சாயத்து செயலர் மற்றும் அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும் என்ற தனி கோரிக்கை வைக்கப்பட்டு மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 2016ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சட்டமன்றத்தில் வெளியிட்ட சட்டமன்ற விதி எண்.110ன் கீழான அறிக்கையில் இது குறித்து ஊதிய மாற்றத்திற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் அலுவலர் குழு பரிசீலித்து அறிக்கை தாக்கல் செய்யும் என தெரிவித்திருந்தார். அது குறித்த கோரிக்கைகள் அரசிடமும், அலுவலர் குழுவிடமும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அதற்கு மாறாக சத்துணவு பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம பஞ்சாயத்து செயலர் மற்றும் அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் 2.57 காரணியால் பெருக்கி திருத்திய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு குறைந்தபட்ச ஊதியம் ரூ.3,000/- ஆகவும் அதிகபட்ச ஊதியம் ரூ,11,000/- ஆகவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருப்பது மேற்கண்ட பணியாளர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

**ஸ்ரீதர் குழுவும் நவம்பர் 2017ம்!**

இதேபோல 2016ல் சட்டமன்ற விதி எண்.110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அது நான்குமுறை நீட்டிக்கப்பட்டு, ஜெயலலிதா அவர்கள் மறைவுக்குப் பின்னர் அது என்ன ஆனது என்று தெரியாமலேயே கைவிடப்பட்டு, பிறகு மீண்டும் ஜாக்டோ ஜியோ போராட்டக்களம் கண்டபிறகு ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ்.தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு நவம்பர் 2017க்குள் அறிக்கை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்வது குறித்து பரிசீலிக்க ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, ஒருவருட காலத்திற்கும் மேலாக அதை பரிசீலித்து அறிக்கை அளிக்காததிலிருந்து அரசுக்கு உள்ள எண்ணம் என்ன என்பதை அனைவரும் புரிந்துகொள்ளலாம். அந்தக் கொடுமையை சகித்துக் கொண்டிருந்த நிலையில் புதிதான இன்னொரு வல்லுநர் குழு அமைத்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை மேலும் ஏமாற்றப் பார்க்கும் இந்த அரசின் நயவஞ்சகத்தை எதிர்த்த பின்னர், தற்போது நீதிமன்றத்தின் மூலமாக பரிந்துரைகளை அளிப்பதற்கான உத்தரவாதம் உறுதி படுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ் தலைமையிலான வல்லுநர் குழு அமைத்தது தொடர்பான அரசு செய்திக்குறிப்பில் மேற்கண்ட குழுவானது ''நடைமுறையில் உள்ள ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்துவதற்கான பணிகளையும் மேற்கொள்ளும்'' என்ற ஒரு புதிய அறிவிப்பை சந்தடி சாக்கில் சேர்த்துள்ளது. இது குறித்து ஜாக்டோ ஜியோ அமைப்பினர் ஈரோட்டில் முதல்வரிடம் கேட்டபோது அதற்கு அவரால் உரிய விளக்கம் தரமுடியவில்லை. ஆக அரசு ஊழியர்கள்

ஆசிரியர்களின் புதிய ஓய்வூதியம் குறித்து ரகசிய வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதற்கான சான்றாகவே இதை பார்க்க வேண்டியுள்ளது.

**சென்ற ஊதிய மாற்றத்திற்கு முன்பும் பின்பும் ஏற்பட்ட ஊதியமுரண்கள் சரி செய்யப்படாமலேயே அறிவிக்கப்பட்டுள்ள புதிய ஊதிய மாற்றம் நம்பிக்கை துரோகத்தின் உச்சம்!**

2008ம் ஆண்டில் மத்திய அரசின் 6வது ஊதியக்குழு முடிவு வெளியிட்ட பின், அனைத்து சங்கங்களும் போராட்டம் நடத்திய பின்னரே ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழு ஏற்படுத்தப்பட்டது. அது 9 மாதகால அவகாசம் எடுத்துக்கொண்ட பின்னரும் சங்கங்கள் முன் வைத்த கோரிக்கைகளை பரிசீலிக்காமலேயே பரிந்துரைகளை சமர்ப்பித்ததாலும், அரசு ஆணை பிறப்பிப்பதற்கு முன்னர் சங்கங்களின் தலைவர்களை அழைத்துப்பேசி பரிந்துரைகளை இறுதிப் படுத்தாதாலும் ஊதிய முரண்பாடுகளுடன் கூடிய ஊதிய மாற்ற அரசாணைகள் வெளிவந்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மக்கள் பணி செய்ய வேண்டிய அரசு ஊழியர்கள் அதை செய்ய போகமுடியாமல் மிகுந்த முரண்பாடுகளுடன் வந்த அரசாணைகளை சரிசெய்ய வேண்டி போராட்டங்களை கையிலெடுக்க வேண்டிய கட்டாயத்தை அரசு ஏற்படுத்தியது, போராட்டங்கள் காரணமாக தமிழக அரசு 9.9.2009 அன்று ஒருநபர் குழுவை அமைத்தது. ஒருநபர் குழுவிடம், ஊதிய நிர்ணயத்தில் உள்ள குறைபாடுகளையும் சுட்டிக் காட்டி, பரிந்துரைகளை அரசாணைகளாக வெளியிடுவதற்கு முன்பாக சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி கருத்தொற்றுமையின் அடிப்படையில் அரசாணைகள் வெளியிடக் கேட்டுக்கொண்ட பிறகும் அது குறித்து ஒரு நபர் குழுவோ அல்லது தமிழக அரசோ அதை ஏற்காமல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை புறந்தள்ளி 26.8.2010 அன்று அரசு ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக்கொள்வதாகக்கூறி 89 அரசாணைகள் வெளியிட்டது. ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கருத்துக்களை பரிசீலிக்காமலேயே வெளியிடப்பட்ட இந்த அரசாணைகள் முரண்பாடுகளின் மொத்த உருவமாக இருந்ததால் அது மேலும் மேலும் அரசு ஊழியர்களிடம் அதிருப்தியை வளர்த்தன, அந்த ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் பேரில் வெளியிடப்பட்ட அரசாணைகளினால் ஏற்பட்ட முரண்பாடுகளும், ஏற்கெனவே இருந்த பழைய முரண்பாடுகளும் தீர்க்கப்படாத நிலையிலேயே, தற்போது புதிய ஊதிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த ஊதிய மாற்றத்தில் முதலாவதாக பழைய ஊதிய முரண்களை சரி செய்துகொண்டு புதிய ஊதிய மாற்றத்தை பரிசீலிப்பதே முரண்பாடுகளற்ற சமச்சீரான ஊதிய மாற்றங்களை ஏற்படுத்த அரசை வலியுறுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

**படிகளும், இடிகளும்!**

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்குவதாக கூறிக்கொள்ளும் இவ்வரசு, மத்திய அரசு ஊழியர்கள் பெறும் ஆரம்ப ஊதியக்கட்டு, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுத் தொகை, போக்குவரத்துப்படி, குழந்தைகள் கல்விப்படி, குறைந்தபட்ச ஓய்வூதியம் போன்ற பல இனங்களில் மத்திய அரசு ஊழியர்கள் பெறுவதை விட குறைவான தொகையை தொடர்ந்து நிர்ணயித்து வருவதும், இந்த ஊதிய மாற்றத்திலும் மத்திய அரசு ஊழியர்கள் பெறும் சலுகைகளில் பலவற்றை தமிழக அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்காமல் புறக்கணித்துள்ளதும் தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் நம்பிக்கைத் துரோகமாகும்.

**இடைநிலை ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் கொடுமை!**

சென்ற ஊதிய மாற்றத்தில் அரசு செய்த இமாலயப் பிழை, இடைநிலை ஆசிரியர்களின் சம்பள உயர்வை பெரிதும் பாதித்துள்ளது. சென்ற ஊதிய மாற்றத்தில் அவர்களது தர ஊதியத்தை ரூ.4200 ஆக நிர்ணயம் செய்யாமல் ரூ.2800/- ஆக நிர்ணயம் செய்ததன் மூலம் இடைநிலை ஆசிரியர்கள் அதற்கான தாக்கீதுகள், பிரதிநிதித்துவங்கள், முறையீடுகள், போராட்டங்கள் என நடவடிக்கை மேற்கொண்ட பின்னர் அவர்களுக்கு தர ஊதியம் உயர்த்தப்படாமல் தனி உதியமாக ரூ.750/- வழங்கப்பட்டது. ஆனால் தற்போதைய ஊதிய மாற்றத்தில் ஊதியக்கட்டு மற்றும் தர ஊதியம் ஒழிக்கப்பட்டு அவை ''சம்பள நிலை''யாக மாற்றப்பட்டுள்ளதால் அவர்கள் பெற்றுவந்த தனி ஊதியம் தற்போதைய சம்பள நிலைக்கு எடுத்துக்கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் இடைநிலை ஆசிரியர்கள் மிகுந்த குறைவான சம்பள நிலைக்கு தள்ளப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து அரசாங்கத்திடம் பல்வேறு முறையீடுகள் கொடுத்திருந்த போதிலும், ஊதிய மாற்ற அலுவலர் குழுவிடம் கூட இது குறித்து விளக்கிக்கூறி குறிப்பாணைகள் அளித்திருந்தும், உடனடியாக முழுக்கவனம் செலுத்த வேண்டிய இடைநிலை ஆசிரியர்கள் சம்பள நிர்ணயித்தில் அலுவலர் குழுவும் அரசும் கொஞ்சம்கூட கவனம் செலுத்தவில்லை. இடைநிலை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலையை சரி செய்ய அரசை நிர்ப்பந்திக்க வேண்டியது. நம் அனைவருக்குமான சவாலாகும்.

**ஒழிக்கப்பட வேண்டிய தொகுப்பூதியம், மதிப்பூதியம் வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்கள் பற்றி அலுவலர் குழு பரிசீலிக்கவேயில்லை!**

கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், சமூகநலத்துறை உடனாட்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஊழியர்களின் உழைப்பு

முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர்.

இதேபோல் மத்திய அரசின் திட்டங்களின் கீழ் மாநிலங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிறுவனங்களிலும் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிறுவனங்களிலும் முற்றிலும் ஒப்பந்த முறையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டு குறைவான ஊதியத்தில் பணியில் அமர்த்தப்படுகின்ற போக்குகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தேசிய பார்வைகுறைபாடு கட்டுப்பாட்டு கழகம், மாநில தொழுநோயாளிகள் கழகம், தேசிய ஊரக சுகாதாரப் பணி, தேசிய நகர்ப்புற சுகாதாரப்பணி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம், தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்து கழகம், நோயாளிகள் நல கழகம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் போன்ற நிறுவனங்களின் சேவைகள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு விடக் கூடியவை அல்ல. காலவேக மாற்றத்தில் இத்தகைய நிறுவனங்கள்/ கழகங்கள்/வாரியங்கள் தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியம் உள்ள நிலையில் அங்கு பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு ஊழியம் செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட அரசு சார்புடைய நிறுவனங்கள் போல் புதிதாக துவக்கப்படும் அலுவலகங்களில் அமர்த்தப்படும் பணியாளர்கள், ஒப்பந்த முறையிலான அடிமாட்டு கூலிமுறையில் அமர்த்தப்படும் போக்கானது உடனடியாக கைவிடப்பட்டு ஏற்கெனவே மேற்கண்ட மத்திய / மாநில அரசு சார்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் அரசு, முறையான ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்கவும், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்களை பணி நிரந்தரமாக்க வேண்டும் என்றும் பல போராட்டங்களை முன்நின்று நடத்தியதால் அந்த போராட்டங்களில் உள்ள நியாயத்தை உணர்ந்த மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 19-02-2016 ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் வதி 110-ன் கீழ் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் ‘‘ஊதிய விகிதங்களை மாற்றியமைத்தல், தொகுப்பூதியத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களை, காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டு வருதல், சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குதல் போன்றவை குறித்து பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இக்கோரிக்கைகள், பல்வேறு அரசு அலுவலர்களின் ஊதிய விகிதங்களை ஒப்பிட்டு, அவர்களின் hierarchy அதாவது அதிகார நிலை மற்றும் துறைகளின் யீயசவைல அதாவது ஒப்புநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்க வேண்டும். எனவே, இத்தகைய கோரிக்கைகளை ஊதியக்குழுவே பரிசீலிக்க இயலும் என்பதால், இந்த கோரிக்கைகள் அனைத்தும் எதிர்வரும் ஊதியக்குழு மூலம் பரிசீலிக்கப்படும்’’ என்று தெரிவித்தார். ஆனால் இதுகுறித்து அலுவலர் குழு எதையும் பரிசீலிக்காமலேயே விட்டிருப்பது கண்டிக்கத்தக்கதாகும். இதுகுறித்து அரசிடமும் நீதிமன்றத்திடமும் முறையிட்டு சரிசெய்ய வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்குமானதாகும்.

சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், ஊராட்சி செயலாளர்கள் போன்றோருக்கு இளநிலை உதவியாளர் ஊதிய விகிதத்திற்கு இணையாக ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு அதற்கு இணையான புதியஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் பரிசீலிக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. ஊர்ப்புற நூலகர்களின் ஊதிய விகிதம் அவர்கள் ஆற்றக்கூடிய பணிப்பொறுப்புகள், பணிநேரம் ஆகியவற்றை கணக்கில் கொண்டு தற்போதைய பதிவறை எழுத்தர் பணி நிலைக்கு இணையான புதிய ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் கண்டுகொள்ளப்படவில்லை.

தமிழகத்தின் சத்துணவு மையங்களிலும், அங்கன்வாடி மையங்களிலும் பணியாற்றி வரக்கூடிய உதவியாளர்களுக்கும், சத்துணவு சமையலர், வருவாய் கிராம உதவியாளர்கள், சமூக வனக் காவலர்கள், சமூகநலத்துறை உடனாட்கள் ஆகியோருக்கு அவர்தம் பணிப்பொறுப்புகளை கருத்தில் கொண்டு ஊதிய மாற்றத்தின்போது வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிகையும் இந்த ஊதிய மாற்றத்தில் பரிசீலிக்காகதது கண்டனத்திற்குரியதாகும்.

உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் லட்சக்கணக்கான ஊழியர்களுக்கு மாதாந்திர ஊதியத்தை உத்தரவாதப்படுத்திடும் வகையில், அரசு கருவூலத்தின்மூலம் ஊதியம் வழங்கப்பட வேண்டும் எனவும், ஏற்கெனவே அரசு ஆணையிட்டுள்ளதைப் போல் அவர்களையும் அரசு ஊழியர்களாக அறிவித்து, அரசு ஊழியர்களுக்கான அனைத்து சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என வலிறுத்தப்பட்டதும் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது.

### தொழில்நுட்ப ஊழியர்களுக்கான ஊதியம், அவர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் நிராகரிப்பு

தமிழ்நாடு அரசாங்கத்தில் பல்வேறு துறைகளில் பணியாற்றிவரும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு அவர்களின் கல்வித்தகுதி மற்றும் தொழில்நுட்ப தகுதி ஆகியவற்றின் அடிப்படையில், தற்போதைய ஊதிய விகிதங்களில் PB1 ஏற்ற முறையில் ரூ.5200-20200 ஊதிய விகிதத்தில் ரூ.2800/- தர ஊதியத்தில் இவர்களது ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு அதற்கு இணையான புதிய ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்கப்பட்டதும் அலுவலர் குழுவால்

கவனிக்கப்படவில்லை. மேலும் தொழில்நுட்ப ஊழியர்கள் அனைவருக்கும் 10 சதம் ஆபத்துப்படி (Risk Allowance) வழங்கப்பட வேண்டும் எனவும் வைக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்படாமலேயே விடப்பட்டுள்ளது துரதிருஷ்டவச மானதாகும். மேலும், தமிழகஅரசின் பல்வேறு துறைகளில் தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்களை பணி நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கையும் கைகழுவப்பட்டுள்ளது.

**மத்திய அரசுக்கு இணையான ஊதியம் இன்னமும் வழங்கப்படாத பணிப்பிரிவினர்!**

தமிழ்நாட்டில் 1.6.88 முதலே மத்திய அரசுக்கு இணையான ஊதிய விகிதங்கள் அமல்படுத்தப்பட்ட நிலையிலும் கூட பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையின் புள்ளி இயல் உதவி ஆய்வாளர், சின்கோனா உதவி கண்காணிப்பாளர், மேற்பார்வையாளர், தொழிற்சாலை ஆய்வகத்துறை இளநிலை வரைவாளர், அருங்காட்சியக காப்பாளர், கிராம சுகாதார செவிலியர், பட்டு வளர்ச்சித் துறையின் இளநிலை ஆய்வாளர், ஆய்வக உதவியாளர், களப்பணி உதவியாளர், சமூகநலத்துறையில் CDPO, RWO, மேற்பார்வையாளர், உடற்கூறு சிகிச்சையாளர், ஆய்வக நுட்பனர் தரம் I மற்றும் II, தமிழ்நாடு சிறப்பு காவலர் அடிப்படை ஊழியர்களான சமையலர் மற்றும் முடிவினைஞர், சிறைத்துறை காவலர் மற்றும் மருத்துவ பதிவேடு அலுவலர் போன்ற பல்வேறு பணிப்பிரிவினர் அதே நிலையிலான மத்திய அரசு ஊழியர்களுக்கான கல்வித் தகுதி நிர்ணயிக்கபட்டிருந்தும், பணிநிலைமை வரையறுக்கப்பட்டிருந்தும் கூட அவர்கள் மத்திய அரசுக்கு இணையான அடிப்படை ஊதியம் வழங்கப்படாத பிரிவினராகவே உள்ளனர். இத்தகைய ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி இந்த ஊதிய மாற்றத்தின்போதாவது களையப்பட்டு இப்பிரிவினருக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதிய நிர்ணயம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதுவும் கருத்தில் கொள்ளப்படாதது கண்டனத்திற்குரியதாகும்.

**அமைச்சுப் பணியாளரது ஊதிய மாற்றமும் ஒழுங்கமைக்கப்படவில்லை!**

அரசுத் துறைகளில் எந்த ஒரு பணியும் திட்டமிடுவதிலிருந்து செயலாக்கம் வரை அனைத்துப் பணிகளிலும் அமைச்சுப் பணியையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அரசு அறிவிக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள உரிய அறிவியல் ரீதியான அளவீடுகளின் அடிப்படையில் அமைச்சுப்பணிப் பிரிவின் கீழ் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படாததாலும், ஓய்வு, பணித் துறப்பு, இறப்பு மற்றும் பதவி உயர்வு போன்றவற்றால் காலியான அமைச்சுப் பணியிடங்கள் காலத்தே நிரப்பப்படாததாலும் அரசின் பல்வேறு துறைகளிலும் உள்ள அமைச்சுப் பணியாளர்கள் கடுமையான பணிப்பளுவை சுமந்து கொண்டு அல்லல்பட்டு வருகின்றனர். அரசுக்கும், துறைக்கும் எதிராக தொடுக்கப்படும் நீதிமன்ற வழக்குகளில் சட்டம் பயின்ற வழக்கறிஞர்கள் தயாரிக்கும் வாத உரைகளின் மீதான எதிர் உறுதி ஆவணம் ஆயத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளில் அமைச்சுப் பணியாளர்களின் மூளை உழைப்பு பெரும்பங்கை வகிக்கிறது. எனினும் ஒவ்வொரு ஊதிய மாற்றத்தின்போதும் அமைச்சுப் பணியாளர்களின் ஊதியம் அவர்களின் பணித் தன்மைக்கேற்ப நிர்ணயிக்கப்படவில்லை. குறிப்பாக 1.6.88 முதல் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் அமல்படுத்தப்பட்டதற்கு பிறகு இவர்களது ஊதிய விகிதத்திற்கு இணையான அல்லது குறைவான ஊதிய விகிதங்களில் ஊதியம் பெற்று வந்த பல்வேறு பணித் தொகுதியினர் அமைச்சுப் பணியாளர்களின் ஊதிய விகிதத்தை விட கூடுதலான ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் நிலைமை உருவானது. இதனால் அமைச்சுப் பணியாளரது ஊதிய சமச்சீர் நிலைமை (Horizontal equiliprium) கடும் தாக்குதலுக்கு உள்ளானது. இந்தப் பின்னணியில் நடைபெற்ற போராட்டங்களின் விளைவாக 1.8.92 மற்றும் 1.9.98 தேதிகளில் தலா 5 சதம் தனி ஊதியம் வழங்கப்பட்டதேயன்றி இவர்களது பணிநிலைமைகளுக்கு பொருத்தமான ஊதிய ஏற்ற முறை வழங்கப்படவில்லை. எனவே இந்த ஊதிய மாற்றத்தின்போது இக்குறைபாடு களையப்பட்டு 1.6.88க்கு முன்பு இருந்த இவர்களது ஊதிய சமச்சீர் நிலைமை பாதுகாக்கப்படக்கூடிய விதத்தில் ஊதியம் நிர்ணயிக்கப் படவேண்டும் என வலியுறுத்திக் கேட்கப்பட்டது மறுதலிக்கப்பட்டுள்ளது ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

**பணியாளர் சீரமைப்புக் குழுவும், தனியார் மயத்தை நோக்கிய நகர்வும்!**

தொகுப்பூதியும் மதிப்பூதியம், வரையறுக்கப்படாத ஊதியங்களை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியங்களை வழங்க வேண்டும் மற்றும் தற்காலிகப் பணியாளர்களை நிரந்தப்பணியாளர்களாக்க வேண்டும், காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் போன்ற கோரிக்கைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளும் விதமாக ஊதிய மாற்றம் தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் (செய்தி வெளியீடு எண்.678 நாள் 11.10.2017) பதில் அளிக்கப்பட்டுள்ளது. அரசின் வருவாய் இனச் செலவினங்களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும் இதரப் பணியிடங்களில் வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ முதல்கட்டமாக பணி நியமனங்களை மேற்கொள்ள தக்க பரிந்துரைகளை அளித்திட ''பணியாளர் சீரமைப்புக் குழு'' (Staff Rationalization Committee) உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகையதொரு பரிந்துரையை அளிக்க ஊதிய மாற்ற அலுவலர் குழுவிற்கு அதிகாரம் இல்லை என்பதுடன் அதன் அதிகார வரம்பு மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களின் அடிப்படையில் மாநில அரசில் பணிபுரியும் ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஊதியவிகிதத்தை உயர்த்தி வழங்குவது குறித்து பரிந்துரைகள் வழங்குவது மட்டுமே. எனவே,

ஏற்கெனவே அரசு அலுவலகங்களில் உள்ள காலி பணியிடங்களை நிரப்பாமல் விட்டுவிடுதற்கான ஏற்பாடுகளையும், வெளிமுகமை மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான பணியிடங்களை அரசுத் துறைகளில் கொண்டு வருவதன் மூலமாகவும் அரசு அலுவலகங்கள் மெல்ல தனியார்மயத்தை நோக்கி நகர்வதற்கான வேலையை ஆரம்பமாகியுள்ளது. இதன் விளைவு மக்கள் நலத் திட்டங்களை மழுங்கடித்து, அவை இல்லாமல் செய்துவிடும் ஏற்பாடாகும். இதை நாம் யாரும் அனுமதிக்க விடக்கூடாது.

**இன்னும் எத்தனை காலமும் ஏமாற்றுவார், நாம் இப்படியே இருந்தால்!**

ஆக இந்த அலுவலர் குழு 2017 பிப்ரவரி மாதம் முதல் பல்வேறு துறைவாரிச் சங்கங்கள் கொடுத்த குறிப்பாணை கோரிக்கைகள், முரண்பாடுகள், குறைபாடுகள் என எதையுமே பரிசீலிக்கவில்லை என்பதையும், மத்திய அரசின் ஊதிய மாற்றத்தை முடிந்த அளவுக்கு குறைத்து, முரண்பாடுகள் எதையும் சரி செய்யாமலேயே காலம் கடத்தி அதை அப்படியே வெளியிடுவதற்கு எட்டு மாதங்களை ஏப்பம் விட்டிருக்கிறது என்பதை இதன்மூலம் நாம் காண முடிகிறது. இந்த நிலையில்தான் தலைமைச் செயலாளர் உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கிறார், அலுவலர் குழு பரிந்துரைகளை வழங்கிய பின் அரசு அதை பரிசீலித்து முடிவெடுக்க மேலும் நான்கைந்து மாதங்கள் தேவைப்படும் என்று. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை எவ்வளவு வேண்டுமானாலும் ஏமாற்றலாம் என்ற எண்ணமே இதற்கு காரணம். நாமும் அந்த அளவுக்கு இந்த ஏமாற்று அரசாங்கங்களை நம்பிக் கிடந்திருக்கிறோம்.

**இது உரிமைக்கான போராட்டம்!**

2006ஆம் ஆண்டு முதல் நாம் ஊதிய நிலுவை மற்றும் ஊதிய முரண்பாடுகள் சரி செய்யப்படுவதற்காக தொடர்ந்து போராடி வருகிறோம். இந்த போராட்டங்கள் என்பவை ஊதிய மாற்றத்தின் அர்த்த அடர்த்தியுடன் ஊதியங்கள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் சட்டப்படியான உரிமைக்கான போராட்டங்களாகும். இந்திய அரசியலமைப்பு சட்டப்படி நியாய ஊதியங்களை அரசாங்கங்கள் வழங்காமல், அவற்றுக்குள் நுழைந்து நிலுவைகளை கொடுக்க மறுப்பதும், ஊதியங்களை குறைப்பதும் அத்துமீறிய செயல்களாகும். நியாயப்படியான தேவைகளை, மறுக்காமல் கொடுக்கும் கடமையும் பொறுப்பும் ஆட்சியாளர்களுக்கு உண்டு. அதை விடுத்து, வேலியே பயிரை மேய்ந்த கதையாய், ஆட்சியாளர்களே அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அநீதிகள் இழைத்தால் அந்தகைய ஆட்சியாளர்கள் நிர்வாகத் திறன் அற்றவர்களாகவும், மக்களுக்கான அரசை நிர்வகிக்க முடியாதவர்களுமாகத்தான் இருக்க முடியும்.

இன்றைய ஆட்சியாளர்கள் வட்டிக்கடை முதலாளிகள் போல், பெட்டி பெட்டியாய் பணம் இருந்தால் போதும் என்ற மனப்பான்மையோடு ஆட்சி நடத்துவது துரதிருஷ்டவசமானது. வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும். நெல் உயர குடி உயரும், குடி உயரக் கோல் உயரும், கோல் உயரக் கோன் உயர்வான் என்ற ஔவை மூதுரையை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். மக்கள் சுபிட்சமாக இருந்தால்தான் நாடு மட்டுமல்ல நாட்டை ஆள்பவர்களும் சுபிட்சமாக இருக்க முடியும் என்பதை இவர்கள் உணர்ந்து கொள்ளாமல் போவார்களேயானால் அது அவர்களின் அழிவுக்கு வழிவகுத்துவிடும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

**சுகங்கள் மட்டும் உங்களுக்கு, சுமைகள் மட்டும் எங்களுக்கா?**

நாட்டில் நியாயங்கள் மாண்டு போய் விட்டன என்பதற்கு ஆள்பவர்களே உதாரணம். அதிகாரவர்க்கமாய் அறியப்படும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 1.1.2016 முதல் ஊதிய மாற்றம் பெற்று விட்டார்கள். ஆள்பவர்களுக்கு ஏவல்புரியும் காவல்துறை ஐ.பி.எஸ்.களும் 1.1.2016 முதல் நிலுவை பாக்கியின்றி ஊதியம் பெற்று விட்டார்கள். மக்கள் பிரதிநிதிகளாய் இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள் முதல் கேபினட் அமைச்சர்கள் வரை 100 சதவீத சம்பள உயர்வு பெற்று விட்டனர். ஐந்தாண்டுகள் மட்டுமே சட்ட மன்ற உறுப்பினர் பதவியில் இருந்தாலும் அவர்கள் ஆயுள் முழுவதும ஓய்வூதியம் பெற அந்தத் தொகையையும் ஆட்சியாளர்கள் உயர்த்தி விட்டார்கள். நாம் இவற்றையெல்லாம் ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்கவில்லை. அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ளவர்கள் மட்டும் ஒரு நயா பைசா மீதம் வைக்காமல் ஊதியம் பெறும் போது அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்?, அவர்களுக்கு சம்பளம் உயர்த்துவது என்றால், நிலுவை கொடுப்பது என்றால் மட்டும் ஏன் ஆட்சியாளர்களுக்கு கையும் சுருண்டு கொள்கிறது, மனதும் சுருங்கிக் கொள்கிறது? நமக்கு அவர்கள் நியாயமான காரணம் ஒன்றைச் சொல்லட்டும். நிதி பற்றாக்குறை என்றால் அவர்கள் வாங்கும் சம்பளத்திற்கு அது பொருந்தாதா? உண்மையான நிதிச்சுமைக்கு முதலில் தோள் கொடுக்க வேண்டியவர்கள் ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கமும் தானே. அவர்கள்தான் நிர்வாகத்தை எப்படி நடத்துவது என்று திட்டமிடுகிறார்கள். அவர்கள் தங்களுக்கானதை எல்லாம் எடுத்துக்கொண்டு, ''கஜானாவில் எதுவுமில்லை அதனால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் நிலுவைத் தொகையை கேட்கக்கூடாது'' என்று சொல்வது எந்த ஊரிலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநியாயம் அல்லவா?

**நம்மிடம் உள்ள பலவீனம்!**

நம்மிடமும் சில குறைகள் உண்டு. நாம் எல்லோரும் தேர்தலில் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களிப்பதில்லை அவரவர் விருப்பப்படி அவரவர் விரும்பிய கட்சிக்கோ, வேட்பாளருக்கோ வாக்களிக்கிறோம். ஆனால்

அரசியல்வாதிகளை பாருங்கள், அவர்களில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் உரிமைகளை பறிக்கும் வேலையில் வேறுபாடு காட்டாமல் ஒற்றுமையாகச் செயல்படுகிறார்கள். எதிர்க்கட்சியாக இருக்கும்போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயங்களை பேசும் இந்த ஜாம்பவான்கள், அரியணை ஏறிவிட்டால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அற்பப்பதராக நினைத்து துார வீசி விடுகிறார்கள். நேரில் சென்று முறையீடு செய்வதற்குக்கூட அனுமதிக்க மறுக்கிறார்கள். இருந்தபோதும், இதுகாறும் நாம் அவர்களைத்தான் மாற்றி மாற்றி அரியணையில் ஏற்றி அழகு பார்த்து பார்த்து இளிச்சவாயர்கள் பட்டம் சூட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த பலவீனத்தை மாற்றினால் தவிர நாம் நம்முடைய உரிமைகளுக்கு நவாப் ஆக இருக்க முடியாது.

21 மாத நிலுவை பறிப்பு என்பது அடிப்படை ஊழியருக்கே குறைந்தபட்சமாக ரூ.77,000/- ஆக இருக்கும் நிலையில் நம் ஒவ்வொருவருடைய பணி நிலைமைக்கு ஏற்ப நிலுவைத் தொகைகளை நாம் விட்டுவிடுவது என்பது நம்முடைய பாக்கெட்டிலிருக்கும் பணத்தை நாமே திருடன் எடுத்துக்கொள்ள அனுமதிப்பதற்கு ஒப்பானதாகும். எத்தனை எத்தனை ஏமாற்றங்கள், நம்பிக்கைத் துரோகங்கள். நாம் இவை எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டது, அரசாங்கம் நமக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்று நினைத்ததால்தான். ஆனால் இந்த 21 மாத நிலுவை கூட உயர்நீதிமன்ற உத்தரவு இல்லாவிட்டால் இன்னும் 24 மாதங்கள் அல்லது 30 மாதங்கள் என்றாகியிருக்கும் என்பதும் நிதர்சனமே. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அரசாங்கம் தன் அங்கமாக பார்க்கவில்லை என்பதன் விளைவுதான் இத்தகைய ஊழியர் விரோதப் போக்கு. இந்த போக்கை நாம்தான் மாற்றி உரிய பரிகாரம் காண வேண்டும்.

**இடைவிடாத போராட்டங்கள் மட்டுமே தடைகளைத் தகர்க்கும்!**

இந்த நிலைமையை நாம் மாற்றாவிட்டால் நமக்கும் நமது சந்ததியினருக்கும் நாம் பெரும் துரோகம் இழைத்துவிட்டவர்களாகி விடுவோம். அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அரசு ஏமாற்றும் போக்கை தொடரவிடாமல் அதற்கு தக்க பாடம் புகட்ட வேண்டும். இல்லாவிட்டால் முதன்மை அமைச்சருக்கும், துறை அமைச்சர்களுக்கும், அவர்களின் வீட்டு வாசல்களின் முன்பு காத்துக்கிடந்து, பூங்கொத்து கொடுத்து, அவர்கள் போடும் பிச்சைக்காக வாலாட்டி காத்திருக்கும் அடிமை வாழ்வு வாழ்பவர்களுடன் சேர்ந்து கொண்டு, அரசு எத்தனை சம்பளப் பிடித்தங்கள் செய்தாலும் நன்றி கூறிக்கொண்டு ஊடகங்களுக்கு பல் இளித்து போஸும் பேட்டியும் கொடுத்துக் கொண்டிருக்கலாம்.

உயர்நீதிமன்றத்தில் பட்டியலிடப்பட்டிருக்கும் நமது வழக்கு விசாரணைக்கு வரும் போது அரசு நமக்கு இழைத்துள்ள ஊதிய முரண்பாடு அநீதிகளை நீதியரசர்கள் முன் தெரிவித்து அரசாங்கம் மறுத்துள்ள 21 மாத நிலுவையை வாதாடிப் பெற்றே தீர்வது என்ற உறுதியோடு நாம் இருக்கிறோம். ஒருவேளை உயர்நீதிமன்றம் தன் அதிகார எல்லையை சுருக்கிக் கொண்டு உத்தரவிட மறுக்கும் நிலை வந்தால், நாம் இழந்திருக்கும் உரிமைகளை போராடிப் பெறுவதற்கு தயாராகவே இருப்போம். அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் போராட்டகளம் நிற்போம்-முன்பை விட உறுதியோடு. அரசின் கரங்களுக்குள் இறுக்கப்பட்டிருக்கும் நம் உரிமைகளை மீட்டெடுப்போம்-முன்பை விட உத்வேகத்தோடு, நமக்கு மறுக்கப்பட்டிருக்கும் மத்திய அரசுக்கு இணையான ஊதியம், நிலுவை மறுப்பு, ஊதிய முரண், ஒழிக்கப்பட வேண்டிய சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூமியம் மற்றும் பழைய ஓய்வூதிய திட்டத்தைப் பெறுதல் போன்ற நிலுவை கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரை போராட்டக்களத்திலிருந்து வீடு திரும்ப மாட்டோம் என சபதமேற்போம். சிந்தாமல் சிதறாமல் வெற்றியை நமதாக்குவோம்.

தட்டிப் பார்ப்போம்
திறக்க மறுத்தால்
தகர்த்தெறிவோம்!

❖

- சேகுவேரோ

# மகளிர் சிறப்பு கருத்தரங்கம்

*தருமபுரியில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் மகளிர் சிறப்பு கருத்தரங்கம் மகளிர் துணைகுழு அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில் தலைமையில் அரசு அலுவலக உதவியாளர் சங்க அலுவலகத் தில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் வரவேற்றார். "புதியதோர் உலகம் செய்வோம்" என்ற தலைப்பில் ஜனநாயக மாதர் சங்க மாநிலச் செயலாளர் கே.ஜோதிலட்சுமியும் "மடமையும் பெண் அடிமையும்" என்ற தலைப்பில் நில அளவைத் துறை மாநில துணைத் தலைவர் அண்ணா.குபேரன் கருத்துரையாற்றினர். இந்நிகழ்வில் ஏராளமான பெண் அரசு ஊழியர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.*

நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வின் சுருக்கப் பதிவு

# தோன்றின் தோழமையொடு தோன்றுக!

இன்றிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருக்குறள் எழுதப்பட்டதாக கூறப்படுகிறது. திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் நட்பு, காதல், பகை, செருக்கு, ஈகை போன்ற பலவிதமான வாழ்க்கை முறைகள் இருந்ததை அவர் எழுதிய குறள்கள் மூலம் அறியப்படுகிறது. ஆனால் அந்த காலத்தில் உரிமைக்காக போராடும் வர்க்கம் இருந்ததாக தெரியவில்லை. ஒருவேளை அதற்கான அவசியம் எழாமல் இருந்திருக்கலாம். அக்காலத்தில் தோன்றிய சங்க இலக்கியங்களிலிருந்து சங்கம் என்பது புலவர்கள் ஒன்றுகூடும் இடமாகவும் அவர்கள் இயற்றிய பாடல்களை வெளியிடும் மையமாகவும் இருந்துள்ளதைத்தான் பார்க்க முடிகிறது. அரசுக்கு அல்லது அரசனுக்கு கோரிக்கை வைக்கும் இடமாக அவை இருந்ததாக தெரியவில்லை. ஆனால் இக்காலத்தில் சங்கம் என்றாலே உரிமைக்காக ஒன்றுகூடுகிற இடமாகவும் அவை பெரும்பாலும் அரசுக்கு கோரிக்கை வைக்கிற, உரிமைகேட்டு போராடுகிற மையங்களாகவே பெரும்பாலும் உள்ளன. இந்த சங்க உணர்வு என்பது ஒரு இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்குள்ளான காலகட்டத்தில் தோன்றியிருக்கக் கூடும். இப்போது எங்கு பார்த்தாலும் சங்க அமைப்புகளும் உரிமை கோஷங்களும் கோரிக்கை பதாகைகளும் தெரிகின்றன. நட்பு, காதல் என்ற உணர்வுகளைத் தாண்டி தோழமை என்ற ஒரு புதிய உணர்வு தோன்றியுள்ளது. இது நட்பைவிட, காதலைவிட மகத்தான உணர்வாக மாறி வருகிறது. தோழமைக்கான இலக்கணங்கள் எப்படி இருக்கும் என்பது தோழர்கள் ஒன்றுகூடும் இடங்களில், அவர்கள் செயல்பாடுகளில், இயக்க நடவடிக்கைகளில் அவர்கள் காட்டும் ஈடுபாடுகளிலிருந்து வெளிப்படுகிறது. காதலுக்கும், நட்புக்கும் அப்பாற்பட்ட ஈர்ப்புவிசைகளை கொண்டதாக தோழமை உணர்வு மாறிவருகிறது. சுப, துக்க நிகழ்வுகளில் இந்த தோழமை சாதி, மதம், இனம், மொழி கடந்து ஒன்றிணைந்து நிற்பது சர்வசாதாரணமாகி வருகிறது. எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற சமத்துவ எண்ணம், ஊழலற்ற சமுதாயம் மலரவேண்டும் என்ற திண்ணம் மெல்ல நாடு முழுவதும், பரவி வருகிறது. இன்றைய பொய், புரட்டு, ஊழல், மக்களின் நலன் மறந்த பதவி மோக அரசியல்வாதிகளுக்கு மத்தியில், நேர்மையான நெறியாளர்களாக, மக்களுக்காக போராடுபவர்களாக, உரிமைகளுக்காக உரத்து குரல் கொடுப்பவர்களாக, பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த சங்கவாதிகள் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கற்பிதங்களை தங்கள் வாழ்க்கை மூலம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் அதற்கு முன்னுதாரணமாக தோழர் முத்துசுந்தரம் இருந்துள்ளார் என்பதும் அவரின் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வுக்காக, தங்களின் பல்வேறு பணிகளையும், ஒப்புக்கொண்ட வேறு நிகழ்ச்சிகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்து கலந்துகொண்டு பேசிய தோழமைத் தலைவர்களின் கருத்துகளிலிருந்து காண முடிகிறது. தோழர் முத்துசுந்தரம் அவர்கள் இத்தகைய உணர்வுகளை விதைத்து வளர்த்து வாழ்ந்து மறைந்து சென்ற மாமனிதர், பெருந்தோழர் என்கிற செய்தி இந்த தேசம் தோழமைச் சமுதாயமாக மாறும்போது வரலாறாக அறியப்படும் என்பதில் ஐயமில்லை. இந்த தோழமை உணர்வுகள் திருவள்ளுவர் காலத்தில் இருந்திருந்தால் அவர் தோன்றின் புகழொடு தோன்றுக என்பதற்கு மாறாக தோன்றின் தோழமையொடு தோன்றுக என்று பாடியிருப்பார். தோழமைக்கு அத்தகைய பெருமை சேர்த்து வாழ்ந்துகாட்டி சென்றிருக்கிற தோழர் ஆர்எம்எஸ் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் தோழர் ஆர்எம்எஸ்-ஸின் திருஉருவப் படத்தை சிஐடியு-வின் அகில இந்திய துணைத்தலைவர் தோழர் ஏ.கே.பத்மநாபன் அவர்கள் திறந்து வைத்தபின், அன்னாருக்கு அனைத்து தோழர்களும் ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்திய பின், தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் தலைமை ஏற்க, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மு.அன்பரசு வரவேற்புரை நல்க, நினைவேந்தல் நிகழ்வு ஆரம்ப மானது.






தோழர் ஏ.கே.பத்மநாபன்
அகில இந்திய துணைத் தலைவர், சிஐடியு

அன்பார்ந்த தோழர்களே,

தோழர் முத்துசுந்தரம் அவர்களுடைய படம் தமிழ் நாடு அரசு ஊழியர் சங்க அலுவலக கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தோழர் முத்துசுந்தரம் அவர்கள் தமிழகம் முழுவ தும் உள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மட்டு மல்ல, கிட்டத்தட்ட அனைத்துப் பகுதி உழைப் பாளி மக்களுடைய நெஞ்சங்களிலே அவருடைய படம், அவர் பணியாற்றக் கூடிய காலத்திலேயே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இன்றும்கூட அவர் மறைந்த பிறகு தொடர்ச்சியாக இரங்கல் கூட்டங்கள் நடைபெற்று வருவதாக தோழர் அன்பரசு குறிப்பிட்டார். கூட்டங்கள் நடத்துவது மட்டுமல்ல தோழர் முத்துசுந்தரம் எந்த லட்சியங்களுக் காக, எந்த அர்ப்பணிப்புத் தன்மையோடு தன் வாழ்நாள் முழுவதும் எல்லா இன்னல்களையும் ஏற்றுக்கொண்டு அந்த இலக்கை நோக்கிய பயணத்தை முன்னெடுத்துச் சென்றாரோ, அந்தப்பணியை தொடர்ந்து செய்வது என்பதுதான் நாம் எந்தத் தலைவரை நினைவு கூறுகிற போதும் சொல்லுகிற வார்த்தை. அது நிறைவேறுகின்ற முறையில் நம்முடைய பணிகளை அமைத்துக் கொள்வது என்பது தான் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமையாக இருக்கிறது என்று நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஒரு நீண்ட உரைக்கு இங்கே இடமேயில்லை - தோழர் முத்துசுந்தரம் அவர்கள் ஆற்றிய பணிகளைக் குறித்தோ, அவர் தலைவனாகிய இயக்கத்தை குறித்தோ. இங்கே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் மட்டுமல்ல பல மாநிலங்களிலிருந்தும் தோழர்கள் இங்கு வந்திருக்கி றார்கள். போராட்ட பாரம்பரியம் மிக்க அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தினுடைய பொதுச் செயலாளராகவும் அதற்கு முன்னால் நிர்வாகியாகவும், பிறகு தலைவராகவும் இருந்து பணியாற்றியவர் தோழர் முத்துசுந்தரம். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒரு தனி மனிதனுக்கு அவனுக்கான சில திறமைகள் இருக்கும் அது வேறு. அந்தத் திறமைகளை பொது சமூகத்திற்கு, தான் சார்ந்த இயக்கத்திற்கு அமைப்புகளுக்கு என்று செழுமைப்படுத்தி பணியாற்றுகிற, அதைத் திறம்பட நிறைவேற்றுகிற அந்தத் திறன் என்பது ஒவ்வொருவரும் இந்தச் சமூகத்தி லிருந்துதான் பெறுகிறோம், தன்னுடைய அமைப்பி லிருந்துதான் பெறுகிறோம், தான் நம்பிக்கை வைத்திருக் கக்கூடிய லட்சியத்திலிருந்துதான் பெறுகிறோம். அப்படிப்பட்ட ஒரு லட்சியத்திற்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்துக்கொள்வது என்ற மனப்பான்மையோடு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திலும், எழுத்தாளர் அமைப்புகளிலும், கலை நிகழ்ச்சிகளிலும் அகில இந்திய நிர்வாகியாக மாறிய பிறகும் அந்தப் பார்வையோடு அவரால் பணியாற்ற முடிந்தது.

நம்மைக் காக்கக்கூடிய கைகள் மட்டுமல்ல, அந்தக் கைகளை யார் இயக்குகிறார்கள் என்பதை புரிந்து கொண்டு, அந்த இலக்கை நோக்கி நம்முடைய கவனத்தைத் திருப்பி, நமக்கு எதிராக உள்ள சக்திகளை தோற்கடிப்பதற்கு தேவையான அணி சேர்க்கை உருவாக்குகிற அந்த லட்சியப்பார்வை இருக்கிறதே, அந்த லட்சியப் பார்வையை தோழர் முத்து சுந்தம் அவர்கள் எப்படிப் பெற்றார் என்பதை புரிந்துகொண்டு, அந்த இலக்கு, அதற்குத் தேவையான பணி, அதை பெறுவதற்கு அடிப்படையாக இருந்த காரணம் என்ன? அதை எவ்வாறு அவர் பெற்றார் என்பதை தோழர் முத்துசுந்தரம் அந்தப் பணியை ஆற்றுவது என்பது, அது தோழர் முத்துசுந்தரமாக இருந்தாலும் தோழர் அப்பனாக இருந்தாலும், இன்றைக்கு நம்மோடு இருந்துகொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற நம்முடைய தோழர் களாக இருந்தாலும் அவர்கள் எல்லோருடைய பணிகளும் அப்படிப்பட்ட ஒரு பார்வையோடு கொண்டு சென்றால் தான் வெற்றிபெற முடியும். அந்தமுறையில் தோழர் முத்து சுந்தரம் அவர்களுடைய பணி இப்போது நடைபெறவிருக் கின்ற வேலைநிறுத்தமாக இருந்தாலும் மற்றபல நடவடிக்கைகளாக இருந்தாலும் உறுதுணையாக இருக்கும். நெருக்கடி மிக்க ஒரு காலகட்டத்தில் தொழிற்சங்க இயக்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அரசு ஊழியர்கள் மட்டுமல்ல அனைத்துத் தொழிலாளர் களும் அந்த முறையில் நம்முடைய பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தோழர் முத்துசுந்தரம் அவர்களுடைய நினைவு நமக்கு என்றென்றும் துணையாக இருக்க வேண்டும். அவருடைய கனவுகளை நிறைவேற்றுவோம் என்று இந்த நேரத்தில் நினைவு படுத்துவது மட்டுமல்ல, நாம் ஒவ்வொருவரும் என்றென் றைக்கும் அதை மனதில் வைத்துக் கொண்டு முன்னேறிச் செல்லவேண்டும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அகில இந்திய சிஐடியு-வின் சார்பாக தோழர் முத்துசுந்தரம் அவர்களுடைய நினைவிற்கு அஞ்சலி செலுத்தி மீண்டும் அனைவருக்கும் நன்றி செலுத்தி நிறைவு செய்கிறேன்,

தோழர் என்.நன்மாறன்,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

தோழர்களே,

மறைந்த தோழர் ஆர்எம்எஸ் அவர்களுக்கு முதலில் எனது புகழஞ்சலியை காணிக்கையாக்குகிறேன். தோழர்

ஆர்எம்எஸ் அவர்கள் இப்படி சட்டென்று மறைவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஒரு நல்லதோழர். அதாவது, சொலல் வள்ளல் சோர்விலன் அஞ்சான் இவையெல்லாம் வள்ளுவருடைய வார்த்தைகள் அவனை இகல்வெல்லல் எவர்க்கும் அரிது என்று சொல்லுவார். இந்த மூணுக்கும் உரியவராக தோழர் ஆர்எம்எஸ் இருந்தார். அவர் பேசுகிற விதமே கேட்டார் பிடிக்க கேளாரும் வியக்க மொழிவதாம் சொல் என்பதற்கு ஏற்ப அவருடைய உரை அமைந்திருக் கும். அதுபோக எந்த நேரமும் மகிழ்ச்சியான மன நிலையை வைத்திருப்பார். அவரை சோர்வாக பார்த்தது ஒருநாளும் கிடையாது. இங்கே அன்பரசு அவர்களும் சுப்பிரமணியன் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். பத்தாண்டு காலம் சட்டமன்றத்திலே பணியாற்றக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்கு கிட்டியது. அங்கே நான் சட்டமன்ற விடுதியில் இருப்பதை விட இங்கு ஆர்எம்எஸ் தோழ ருடன் இருப்பது மகிழ்ச்சியாக இருக்கும். அப்படின்னா அங்கே என்ன துன்பத்தை அனுபவிச்சீங்கன்னு நீங்க கேக்கக்கூடாது. இங்கே வந்தால் ஒரு ஆறுதல் கிடைக் கும், அசை போடுவதற்கு உதவியாக இருக்கும். அதை விட சிறப்பு, அடுத்தநாள் என்ன மானிய கோரிக்கையோ அதில் எதை எழுதித் தரவேண்டும் என்பதை இங்கே இருந்தே கற்றுத் தருவார்கள். இது வினாத்தாள் வெளியாவதற்கு முன்பேயே படிச்சுட்டு போறது மாதிரி. இந்த அலுவலகம் எனக்கு ரொம்ப பயன்பட்டது.

(iii) If a Government employee draws his next increment in the revised pay scale under sub-rule (ii) above and thereby becomes eligible for higher pay than his senior whose next increment falls due on a later date, then the pay of such senior shall be re-fixed equal to the pay of the junior from the date on which the junior becomes entitled to higher pay.

**11. Stagnation and Bonus increment:-**

(1) A Government employee drawing pay in the level 24 and above shall on completion of every term of 10 years of service in a particular level without promotion shall be granted one additional increment as stagnation increment on the date of completion of such term.

Provided that periods that such Government employee has worked in posts in the corresponding grade in the existing pay structure or corresponding pay scale prior to introduction of existing pay structure without promotion shall be counted while arriving at the term of service in the particular level.

(2) Government employee completing 30 years of continuous service in the same post shall be granted one additional increment as bonus increment on the date of completion of such period.

(3) Where a Government employee has been drawing maximum permissible pay of the applicable pay band or scale in the existing pay structure for more than two years as on 1st January 2016, he shall be sanctioned one additional increment for every two completed years of stagnation at such maximum permissible pay after fixing pay in the revised pay structure under rule 7, subject to the condition that the pay arrived at after grant of such increment does not exceed the maximum of the applicable level of the Pay Matrix. (Illustration-IV : Schedule-V)

**12. Additional increments on award of Selection Grade and Special Grade-**

(1) A Government employee in Level-1 to Level-23, on being awarded selection grade or special grade, shall be granted two additional increments in the same level in the Pay Matrix on the date of award of that grade.

(2) Where on award of selection or special grade to a Government employee, consequent to grant of additional increments, the pay of such Government employee gets fixed in the revised pay structure at a pay higher than pay in the same level of another Government employee senior to him in the same cadre, the pay of the latter shall be stepped up to the same Cell in the same level in the revised pay structure as that of his junior.

Provided that upon refixing the pay of the senior as above, Fundamental Rule 27 shall apply and the next increment of the senior officer shall become due on completion of the requisite qualifying service with effect from the date of refixation of the pay.

**13. Removal of anomalies-**

(1) Where in the fixation of pay in the revised pay structure upon appointment or promotion to a higher post, pay of a Government employee gets fixed higher than that of a Government employee senior to him, who has been promoted earlier to the same higher post in the same cadre, the pay of such senior Government employee in the revised pay structure shall be stepped up to the same Cell in the revised pay structure as that of his junior in that higher post and such stepping up shall be done with effect from the date of promotion of the junior Government employee subject to the fulfilment of the following conditions, namely:-

(a) both the junior and the senior Government employees should belong to the same cadre and the posts in which they have been promoted are identical in the same cadre;

(b) the existing pay structure and the revised pay structure of the lower and higher posts in which they are entitled to draw pay are identical;

(c) the senior Government employees at the time of promotion should have drawn equal or more pay than the junior;

(d) the anomaly should have arisen directly as a result of the application of the provisions of Fundamental Rules or any other rule or order regulating pay fixation on such promotion in the revised pay structure;

Provided that where the pay of the junior employee is greater than that of the senior on account of any advance increments granted to him, the provisions of this sub rule shall not be invoked to step up the pay of the senior employee.

(2) The order relating to re-fixation of the pay of the senior employee in accordance with sub rule (1) shall be issued under the provisions of Fundamental Rules and the senior employee shall be entitled to the next increment on completion of the required qualifying service one year with effect from the date of re-fixation of pay.

**14. Date of effect-**

The revised Pay Level for regular Government employees and employees on special time scales of pay / Consolidated Pay / Fixed Pay / Honorarium shall take notional effect from 1st January, 2016 with monetary benefit from 1st October, 2017.

**15. Power to relax / amend the rules-**

Where the Government is satisfied that the operation of all or any of the provisions of these rules causes undue hardship in any particular case, the Government, by order, dispense with or relax the requirements of that rule to such extent and subject to such conditions as deemed necessary for dealing with the case in a just and equitable manner.

**16. Interpretation-**

If any question arises relating to the interpretation of any of the provisions of these rules, it shall be referred to the State Government for decision and the Government may, by order remove any difficulty that may arise in giving effect to the provisions of these rules.

**17. Effect of other rules-**

Save as otherwise provided in these Rules, no provision of any other rules made or deemed to have been made under the proviso to Article 309 of the Constitution of India shall, in so far as it is inconsistent with any of the provision of these Rules, have any effect.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

## SCHEDULE-II

## LIST OF LEVELS OF PAY
## [EMPLOYEES ON SPECIAL TIME SCALES OF PAY]

| Sl. No. | Group | Existing Scales of Pay | | Revised Levels of Pay | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Pay Band | Grade Pay | Level | Minimum | - | Maximum |
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] | | [7] |
| 1 | | STS-1 Rs.950-2000 | 200 | **1** | 3000 | - | 9000 |
| 2 | | STS-2 Rs.1300-3000 | 300 | **2** | 4100 | - | 12500 |
| 3 | | STS-3 Rs.1800-3300 | 400 | **3** | 5700 | - | 18000 |
| 4 | | STS-4 Rs.2500-5000 | 500 | **4** | 7700 | - | 24200 |
| 5 | | STS-5 Rs.3500-6000 | 600 | **5** | 10500 | - | 33100 |
| 6 | | STS-5 Rs.3500-6000 | 800 | **6** | 11100 | - | 35100 |

## SCHEDULE-I

## LIST OF LEVELS OF PAY
### [REGULAR GOVERNMENT EMPLOYEES]

| Sl. No. | Group | Existing Scales of Pay | | Revised Levels of Pay | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Pay Band | Grade Pay | Level | Minimum | - | Maximum |
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] | | [7] |
| **1** | **D** | **PB-1A Rs.4800-10000** | **1300** | **1** | **15700** | **-** | **50000** |
| 2 | C | | 1400 | **2** | 15900 | - | 50400 |
| 3 | C | | 1650 | **3** | 16600 | - | 52400 |
| **4** | **C** | **PB-1 Rs.5200-20200** | **1800** | **4** | **18000** | **-** | **56900** |
| 5 | C | | 1900 | **5** | 18200 | - | 57900 |
| 6 | C | | 2000 | **6** | 18500 | - | 58600 |
| 7 | C | | 2200 | **7** | 19000 | - | 60300 |
| 8 | C | | 2400 | **8** | 19500 | - | 62000 |
| 9 | C | | 2600 | **9** | 20000 | - | 63600 |
| 10 | C | | 2800 | **10** | 20600 | - | 65500 |
| **11** | **C** | **PB-2 Rs.9300-34800** | **4200** | **11** | **35400** | **-** | **112400** |
| 12 | C | | 4300 | **12** | 35600 | - | 112800 |
| 13 | B | | 4400 | **13** | 35900 | - | 113500 |
| 14 | B | | 4450 | **14** | 36000 | - | 114000 |
| 15 | B | | 4500 | **15** | 36200 | - | 114800 |
| 16 | B | | 4600 | **16** | 36400 | - | 115700 |
| 17 | B | | 4700 | **17** | 36700 | - | 116200 |
| 18 | B | | 4800 | **18** | 36900 | - | 116600 |
| 19 | B | | 4900 | **19** | 37200 | - | 117600 |
| 20 | B | | 5100 | **20** | 37700 | - | 119500 |
| **21** | **B** | **PB-3 Rs.15600-39100** | **5200** | **21** | **55500** | **-** | **175700** |
| 22 | B | | **5400** | **22** | **56100** | **-** | **177500** |
| 23 | B | | 5700 | **23** | 56900 | - | 180500 |
| 24 | B | | 6000 | **24** | 57700 | - | 182400 |
| 25 | A | | 6600 | **25** | 59300 | - | 187700 |
| 26 | A | | 7600 | **26** | 61900 | - | 196700 |
| 27 | A | | 7700 | **27** | 62200 | - | 197200 |
| **28** | **A** | **PB-4 Rs.37400-67000** | **8700** | **28** | **123100** | **-** | **215900** |
| 29 | A | | 8800 | **29** | 123400 | - | 216300 |
| 30 | A | | 8900 | **30** | 123600 | - | 216600 |
| 31 | A | | 9500 | **31** | 125200 | - | 219800 |
| 32 | A | | 10000 | **32** | 128900 | - | 225000 |

**தமிழக அரசு 8வது ஊதிய மாற்ற அரசாணை எண்.303 நிதி (ஊதியக் குழு) துறை. நாள் 11.10.2017**

**மத்திய அரசு ஊதியத்திற்கும் தமிழக அரசு ஊதியத்திற்கும் ஊதிய நிலையில் உள்ள வித்தியாசம் மற்றும் தமிழக அரசு ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு அட்டவணை**

| நிலை எண். | ஊதிய கட்டு | மத்திய அரசு | | | தமிழக அரசு | | | வித்தியாசம்/இழப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தர ஊதியம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | தர ஊதியம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1. | PB-1A Rs.4800-10000 | | | | 1300 | 15700 | 50000 | | |
| 2. | | | | | 1400 | 15900 | 50400 | | |
| 3. | | | | | 1650 | 16600 | 52400 | | |
| 4. | | 1800 | 18000 | 56900 | 1800 | 18000 | 56900 | | |
| 5. | | 1900 | 19900 | 63200 | 1900 | 18200 | 57900 | 1700 | 5300 |
| 6. | PB-1 Rs.5200-20200 | 2000 | 21700 | 69100 | 2000 | 18500 | 58600 | 3200 | 10500 |
| 7. | | | | | 2200 | 19000 | 60300 | | |
| 8. | | 2400 | 25500 | 81100 | 2400 | 19500 | 62000 | 6000 | 19100 |
| 9. | | | | | 2600 | 20000 | 63600 | | |
| 10. | | 2800 | 29200 | 92300 | 2800 | 20600 | 65500 | 8600 | 26800 |
| 11. | | 4200 | 35400 | 112400 | 4200 | 35400 | 112400 | | |
| 12. | | | | | 4300 | 35600 | 112800 | | |
| 13. | | | | | 4400 | 35900 | 113500 | | |
| 14. | | | | | 4450 | 36000 | 114000 | | |
| 15. | PB-2 Rs.9300-34800 | | | | 4500 | 36200 | 114800 | | |
| 16. | | 4600 | 44900 | 142400 | 4600 | 36400 | 115700 | 8500 | 26700 |
| 17. | | | | | 4700 | 36700 | 116200 | | |
| 18. | | 4800 | 47600 | 151100 | 4800 | 36900 | 116600 | 10700 | 34500 |
| 19. | | | | | 4900 | 37200 | 117600 | | |
| 20. | | | | | 5100 | 37700 | 119500 | | |
| 21. | | 5400 | 53100 | 167800 | | | | | |
| 22. | | | | | 5200 | 55500 | 175700 | | |
| 23. | | 5400 | 56100 | 177500 | 5400 | 56100 | 177500 | | |
| 24. | | | | | 5700 | 56900 | 180500 | | |
| 25. | PB-3 Rs.15600-39100 | | | | 6000 | 57700 | 182400 | | |
| 26. | | 6600 | 67700 | 208700 | 6600 | 59300 | 187700 | 8400 | 21000 |
| 27. | | 7600 | 78800 | 209200 | 7600 | 61900 | 196700 | 16900 | 12500 |
| 28. | | | | | 7700 | 62200 | 197200 | | |
| 29. | | 8700 | 123100 | 215900 | 8700 | 123100 | 215900 | | |
| 30. | PB-4 Rs.37400-67000 | | | | 8800 | 123400 | 216300 | | |
| 31. | | 8900 | 131100 | 216600 | 8900 | 123600 | 216600 | 7500 | |
| 32. | | | | | 9500 | 125200 | 219800 | | |
| 33. | | 10000 | 144200 | 218200 | 10000 | 128900 | 225000 | 15300 | -6800 |

# வெற்றுச் செலவல்ல ஓய்வூதியம்

அரசின் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசு ஊழியர்களின் பங்களிப்புகள் அளப்பரியவை. ஆட்சியாளர்களுக்குத் தேவைப்படும் ஆலோசனைகள், கருத்துகள், செயல்திட்டங்கள் போன்றவற்றைப் பலவகையிலும் ஆராய்ந்து, அவை அரசின் கொள்கைகளாகவும் திட்டங்களாகவும் வடிவம் கொடுப்பதில் ஊழியர்களின் இரவு பகல் பாரா உழைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. தேர்தல் காலம், பேரிடர் காலம், நிவாரண உதவிகள் அளித்தல், தேர்வுக்கான தயாரிப்பு மற்றும் திருத்தும் பணிகள் முதலான வற்றின்போது அந்தந்தத் துறைகள் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஓய்வில்லாமல் உழைக்க வேண்டியிருக்கிறது. பச்சிளங்குழந்தைக்குப் பாலூட்டவோ சோறூட்டவோ இயலாமல் நெரிகட்டிக்கொண்டு தவிக்கும் பெண் ஊழியர்கள் மற்றும் ஆசிரியைகளின் அவலப்பாடுகள் சொல்லி மாளாதவை.

ஊதியம் வழங்கல் என்பது உழைப்பிற்கானது என வரிந்து கட்டிப் பேசுவதில் பயனில்லை. உழைப்பிற்கு உரிய நியாயமான ஊதியத்திற் கான போராட்டமானது அனைத்து நிலைகளிலும் தொன்றுதொட்டு நடந்து வரும் துர்ப்பாக்கிய நிலையேதான் இங்கும் உள்ளது. அப்படி யிருக்கும்பட்சத்தில், மிகையான உழைப்பிற்கான ஊதியத்தைக் கோருவதென்பது இயலாத ஒன்றாக உள்ளது. இக்கோரிக்கையானது ஆட்சியாளர்களும் பொதுமக்களும் ஆகப் பெரிய சமூகக் குற்ற மாகப் பார்க்கப்பட்டுப் பரப்புரை செய்யப்படும் நிலையை என்னவென்பது?

## அரசு ஊழியர்களும் தொழிலாளர்களே

அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஏனையோரைப் போன்றே வாழக் கடன்பட்டவர்கள். பன்னாட்டுத் தொழிலாளர்கள் அமைப்பு பரிந்துரைக்கும் ஊதியம் மற்றும் விடுப்புகள் சார்ந்த எல்லாவித உரிமைகளுக்கும் உட்பட்டவர்கள். இவர்கள் யாவரும் தமக்குத் தாமே ஊதியங்களை நிர்ணயம் செய்து கொள்ளும் அதிகாரம் படைத்தவர் களும் அல்லர். நாட்டின் நிதிநிலைமைகளைக் கருத்தில் கொண்டு மனத்தளவில் ஒப்புக்கொண்டாலும்கூட, நியாயத்திற்கு சற்றும் பொருந்தாத வகையில் பரிந்துரைக்கப்படும் ஊதியக்குழுவின் அறிக்கையிலும் ஆயிரம் குளறுபடிகள்!

இந்த நிலையில் மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அதன்பின் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் பெறுவதற்கு பல கட்டப் போராட்டங்களையும் இழப்புகளையும் எதிர்கொண்டாலும் உரிய நியாயங்கள் இதுவரையிலும் கிடைக்கவில்லை.

ஊதிய முரண்பாடுகளும் வேறுபாடுகளும் சுரண்டப்படும் உழைப் பின் வலிகளையும் வேதனைகளையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவையே ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களைப் போராட்டக் களத்திற்கு இட்டுச் செல்கின்றன. மக்களையோ மாணவர் களையோ பாதிக்கச் செய்வது இத்தகையோரின் நோக்கமல்ல.

## புதிய ஓய்வூதியத் திட்டம்

அரசு ஊழியர்கள் அநீதிக்குள்ளாக்கப்பட்ட நியாயங்களை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டித் தக்க நீதியை நிலைநாட்டிடவே அறவழிப் போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. பணிக்காலத்தில் மாத ஊதியம் மற்றும் இதர ஊதியப் பணப்பலன் களும் பணிநிறைவுக்குப் பிறகு ஓய்வூதியம் பெற ஒவ்வொரு அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தகுதியுடையவராவர்.

காலப்போக்கில் உலகமயம், தாராளமயம் மற்றும் உலக வங்கியின் நிர்ப்பந்தம் காரணமாக இந்த அடிப்படை உரிமை பறிபோனது. ஆம், ஓய்வூதியம் வழங்கும் முறையில் 2003 - 2004 ஆம் ஆண்டுகளில் பழைய நடைமுறைகள் யாவும் ஒழிக்கப்பட்டு மாறாக, புதிய சீர்திருத்தங்கள் ஓய்வூதியத் திட்டத்தில் புகுத்தப்பட்டன.

குறிப்பாக, 2003 ஏப்ரல் 1 அல்லது அதற்குப் பின் தமிழக அரசுப் பணிகளில் நியமனம் பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர், பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தில் கட்டாயமாக உட்படுத்தப்பட்டனர். இவர்களிடமிருந்து புதிய ஓய்வூதியத் திட்டத்திற் கென பங்களிப்பாக, ஒவ்வொரு பணியாளரின் அடிப்படை ஊதியம், தர ஊதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றிலிருந்து 10% தொகைப் பிடித்தம் செய்யப்படுகிறது. அதேவேளையில் அரசும் அதே அளவு தொகையைச் செலுத்துவதை உறுதியளித்துள்ளது.

மேலும், மொத்தக் கூடுதல் தொகைக்கு ஆண்டுதோறும் ஏனைய ஊழியர் சேம நலநிதிக்கு வழங்கப்படும் வட்டியினைத் தந்து அரசின் கருவூலக் கணக்குத் துறை, அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் உதவியுடன் இதன் கணக்குகளைப் பராமரித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சற்றேறக்குறைய 4,62,000 பயனாளிகளாக உள்ளனர்.

## மறுக்கப்படும் உரிமைகள்

இப்புதிய ஓய்வூதியத் திட்டமானது பழைய ஓய்வூதிய நடைமுறை களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. பணி ஓய்விற்குப் பின் ஓர் அரசு ஊழியர் பழைய ஓய்வூதியத்தின்கீழ் பெறும் அகவிலைப்படி மாற்றம் நிரம்பிய பணிக்காலத்தில் கடைசியாகப் பெற்ற அடிப்படை ஊதியத்தில் பாதியளவிலான ஓய்வூதியம், இறப்பிற்குப் பின் குடும்பத்தாருக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம், பணிக்கொடை, ஓய்வூதியத்தைத் தொகுத்துப் பெறும் நிகர ஊதியம் ஆகிய வசதிகள் புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் அரசு ஊழியருக்கும் ஆசிரியருக்கும் மறுக்கப் படுவதாக உள்ளது.

14 ஆண்டுகால தொடர் போராட்டத்தின் விளைவாக, அண்மையில்தான் தமிழக அரசின் நிதித்துறை செய்திக் குறிப்பில் 4,62,327 பேரின் பங்களிப்புத் தொகை, அரசுப் பங்களிப்புத் தொகை மற்றும் வட்டியுடன் சேர்த்து ரூ.18,016 கோடி ரூபாய் அரசின் பொதுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

தவிர, இத்திட்டத்தின்படி பணிநிறைவு, பணிவிலகல் மற்றும் இறப்பு ஆகியவற்றினை எதிர்கொள்ளும் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் மொத்தம் சேமித்த பணத்தில் 60% தொகை மட்டுமே திரும்ப வழங்கப்படும் எனவும் மீதமுள்ள 40% பங்குச்சந்தையில் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து பெறப்படும் லாபத்தொகையிலிருந்து குறிப்பிட்ட அளவிலான தொகை ஓய்வூதியமாக அளிக்கப்படும் எனவும் சொல்லப்படுகிறது.

இதுபோன்ற நடைமுறையை மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கி உள்ளனர். விதிவிலக் காக திரிபுரா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் மட்டும் பழைய ஓய்வூதியத் திட்டம் இன்னும் தொடர்கிறது.

அறுபது வயதை எட்டுவோர் மிச்சமுள்ள ஏனைய காலங்களில் இளம் வயதினர் போல் ஓடியாடி உழைத்திட இயலாது. புதிய திட்டத்தின் கீழ் பணி ஓய்வுப் பெற்றோரைக் கொண்டாடும் இனிய தருணங்கள் பழங்கதைகளாகவோ கற்பனைகளாகவோ எதிர்பார்ப்புகளாகவோ மட்டுமே இருக்கும். இப்படி கைவிடப்பட்டவர்களால் ஆயிரமாயிரம் நெஞ்சைப் பிளக்கும் கண்ணீர்க் கதைகள் ஓலமிட்டுக் காற்றில் பிசுபிசுக்கும். அரசின் நிர்வாகம் தலைசிறக்க தம் ஆயுள் முழுவதை யும் அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருண்ட வாழ்க்கைக்கு இந்த இரு அரசுகளின் கைமாறுதான் என்ன?

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அரசுக்கு உழைத்தோருக்கான வெற்றுச் செலவு அல்ல ஓய்வூதியம். மூத்த குடிமக்களை நிம்மதி யாகவும் மரியாதையுடனும் வாழ வழிவகுக்கும் உபரி ஊதியம். அவ்வளவே!

நன்றி : தி இந்து தமிழ், 28.9.2017

# ஒத்துழையாமை இயக்கம் உந்தித் தள்ளிய ரஷ்யப் புரட்சி



"ஆகா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி" என மகாகவி பாரதியால் புகழ்ந்து பாடப்பட்ட ரஷ்யப்புரட்சி நூற்றாண்டை நிறைவு செய்துள்ளது. சோவியத் ரஷ்யாவில் சோஷலிசம் மலர்ந்து ஒரு தலைமுறை பிறப்பு முதல் இறப்பு வரை மண்ணில் சொர்க்கம் கண்டது. ரஷ்யப்புரட்சியின் தாக்கம் இந்தியச் சுதந்திரப் போரை உந்தித் தள்ளியது. குறிப்பாக இந்திய சுதந்திரப் போரில் கையாளப் பட்ட ஒத்துழையாமை இயக்கம் வலுப்பெற ரஷ்யப் புரட்சி கிரியாவூக்கியாகத் திகழ்ந்தது எனின் மிகையன்று.

இந்தியாவில் முதல் ஒத்துழையாமை இயக்கம் ரஷ்யப் புரட்சிக்குப்பின் துவங்கியது. அதில் பங்கேற்றவர்கள் மற்றும் அமைப்பாளர்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் விதத்தில் அது உரிய காலத்திற்கு முன்பே நிறுத்தப்பட்டது. அந்த ஆண்டுகளில் ரஷ்யப் புரட்சியானது அனைத்து சிரமங்களையும் மீறி தன்னை வெற்றிகரமாகப் பலப்படுத்திக் கொண்டது.

ரஷ்யர்களின் வெற்றிக்கும் இத்தியர்களின் தோல்விக்குமிடையே ஒப்பீடு செய்வது தவிர்க்க முடியாதது. காந்தியின் தலைமையிலான திட்டம், நீண்டகால நடைமுறைக் கொள்கை, உடனடி நடைமுறைக் கொள்கை ஆகியவற்றை லெனினிய கருத்துக்களோடு விமர்சனரீதியாக மறுமதிப்பீடு செய்வதற்கு இட்டுச் செல்கிறது. லெனினிய நூல்களை ஆங்கிலேயர்கள் தடை செய்து கைப்பற்றினாலும் அவை இந்தியாவிற்குள் வந்துகொண்டே இருந்தன. அவற்றின் செல்வாக்கு அக்கால இடதுசாரி ஏடுகளின் விமர்சனரீதியான கருத்துக்களில் தெளிவாகத் தெரிந்தது.

பர்தோலி தீர்மானம் மூலம் காங்கிரஸ் தலைமையானது தேசிய எழுச்சி மேலோங்கியிருக்கையில் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தியதானது அந்த எழுச்சியைத் தகர்த்துவிட்டது. இது காங்கிரசை மக்களிடமிருந்து தற்காலிகமாக தனிமைப்படுத்தியது. சுயராஜ்ஜியத்திற்காக காங்கிரஸ் போராட்டத்தின்மீது தங்களுடைய நம்பிக்கை முழுவதையும் வைத்திருந்த உழைக்கும் மக்களின் இதயங்களை உடைத்தது. அவர்கள் உருவாக்கிய அமைப்புகளை சுக்கு நூறாக்கியது. ஒளி பாய்ச்சிய புதிய லெனினிய ஒளியில் இந்திய இடதுசாரி பத்திரிக்கைகள் துணிச்சலாக எழுதின.

> "விவசாயிகள், சாகுபடியாளர்கள், தினக்கூலித் தொழிலாளர்கள், ஆகியோர் நமது தரப்பில் இருந்தால் ஒழிய நாம் எதையும் செய்ய இயலாது. அதிகபட்சமாக நாம் சிறிது கூச்சல் போட்டு மற்றொரு தவணை சீர்திருத்தம் பெறலாம்; ஆனால் நாட்டின் சுதந்திரம் என்பது ஒருபோதும் அந்த வழியில் வரப்போவதில்லை."
>
> "இந்துஸ்தானம் (இந்தி மொழி பேசும் பிராந்தியங்கள்) முழுவதும் விவசாய அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ராஜ்புதனாவில் மக்கள் தங்கள் முழுப்பலத்தையும் கொண்டு ஜமீன்தாரர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட ஆரம்பித்துவிட்டனர். ஆனால் அந்த மக்கள் அனைத்து வேதனைகளையும் அமைதியாக, பொறுமையாகத் தாங்கிக் கொள்ள வேண்டுமென்றும், அடுத்த பிறவியில் நல்ல வழி தேடவேண்டுமென்றும் அவர்களுக்கு ஆலோசனை கூறி காங்கிரஸ் அதனுடைய கடமையை முடித்துக் கொண்டது. அவர்களுடைய வேதனையிலிருந்து அவர்களை விடுவிப்ப தற்கான ஒரு முயற்சி கூட காங்கிரசின் வேலைகளில் இடம் பெறவில்லை."

*(ஆத்ம சக்தி ஜுலை 17, 1922)*

ஆத்ம சக்தி 1922 ஜுலை இறுதியில் ஒரு எச்சரிக்கையை எழுப்பியது. அதாவது இந்திய அரசாங்கம் ஏற்கெனவே தொழிலாளிகள் மற்றும் விவசாயிகளின் பங்கை நன்கறிந்து உள்ளதென்றும்,

*விவசாயிகளின் நிலைமைகளை மேம்படுத்துமாறு தாலுக்தார்கள் மீது சில நிர்ப்பந்தம் செலுத்துகிறதென்றும் இதன் மூலம் கிராமப்புறத் தலைவர்களாக உருவெடுத்துள்ளதென்றும் அரசாங்க ஆதரவு நபர்கள் தொழிற்சங்கங்களை உருவாக்குகிறார்கள் என்றும் தொழிலாளர் தலைவராக செயல்படுகிறார்கள் என்றும் அது மேலும் கூறியது: "அதன் உண்மையான நோக்கமானது மக்களுக்கும் நடுத்தர வர்க்கங்களுக்குமிடையே எவ்வித இணைப்பும் இல்லாது பார்த்துக் கொள்வதுதான்."*

*இடதுசாரிகள் மிகவும் துணிச்சலுடன் வெளிப்படையாகப் பேசுபவர்களானார்கள்.*

"காவல் காப்பு வரி மற்றும் உப்பு வரியை நிறுத்துவதென்று நீங்கள் கூறியபோது மக்கள் உடனே உங்களுக்கு செவி சாய்த்தார்கள். ஆனால் சௌரிசௌரா சம்பவம் எத்தினத்தில உங்கள் துணிவை எடுத்துவிட்டதோ அப்பொழுது நீங்கள் வெறும் வாய்ச்சவடால்காரரர்கள் மட்டுமே, மிகமோசமான ஊழியர்கள் என்றும் மக்கள்புரிந்து கொண்டனர். உண்மை என்னவென்றால் நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல நீங்கள் ஒன்றும் மகத்தானவரகள் அல்ல"

"நாடு தயாராகவில்லை என்று சொல்வது ஒரு பொய். நீங்கள்தாம் தயாராக இல்லாமல் இருக்கிறீர்கள். எந்தளவுக்கென்றால் உங்களுடைய உடைமைகள் மீதான பற்றைத் துறக்க இயலாத அளவிற்கு"

*(ஆத்ம சக்தி நவம்பர் 15, 1922)*

*சோஷலிஸ்ட் இதழ்..ஆகஸ்ட்26, 1922 ல் இவ்வாறு எழுதியது:*

"காங்கிரஸ் தீர்மானங்களை அமுலாக்காததற்காக பலர் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஆனால் அமிர்தசரஸ் மற்றும் நாக்பூர் காங்கிரஸ்களில், தொழிலாளர்களை அணி திரட்டும் பணியில் காங்கிரஸ்காரர்கள் ஈடுபட வேண்டுமென்று வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் முற்றிலும் மறந்து விட்டனர்"

*வெகுஜன சத்யாக்கிரக இயக்கம் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பரவலான அதிருப்தி தோன்றியது. எனினும் அது, தோல்வி மனப்பான்மைக்கோ சோர்வுக்கோ இட்டுச் செல்லவில்லை. தேசிய இடதுசாரிகள் திட்ட அடிப்படையிலான போரைத் தொடங்கினர்; அதுஉடைக்க முடியாத எப்பொழுதும் செயல்படக் கூடிய நெம்புகோலாக இருந்தது. அது படிப்படியாக அரசியல் நிலையை உயர்த்தியது.*

*சி.எஸ்.ரங்கா அய்யர் தமதுஆங்கில வார ஏடான சுதந்திரத்தில் புதிய உணர்வை இவ்வாறு வெளிப்படுத்தினார்:*

"காங்கிரஸ் இதுவரை முழுச்சுதந்திரம் தான் தங்கள் லட்சியம் என்பதை நிச்சயிப்பதற்குத் தவறிவிட்டது. ஏனெனில் அது நடுத்தர வர்க்கங்களால் அதிக்கம் செலுத்தப்பட்டது. இவர்களில் பெரும்பாலானோர் ஐரோப்பாவைக் காப்பியடிக்கும் குரங்குகளாவர். பேயைப் பேய் என்று அழைக்க அச்சப்படாத பண்டைய பாரம்பரியத்திலிருந்து வந்த எளிய இதயங் கொண்ட மக்களின் ஆக்கப்பூர்வ சக்தியை காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டுமானால் அது தன் அணியிலிருந்து அரசியல் வாதிகள், ராஜீயவாதிகள் போன்றோரைக் களை எடுக்க வேண்டும்."

*காங்கிரஸ்காரர்களால் நடத்தப்பட்ட ஒரு வெகுஜன வங்காளி ஏடு "சிரமிக்" தன்னுடைய இதழில் தொழிலாளி வர்க்கத்தின் அதிகரித்து வரும் உணர்வையும் அதனுடைய வரலாற்றுப் பங்கினையும் வெளிப்படுத்த பாரம்பரிய புராண மரபுச் சொற்றொடர்களையும், கற்பனை வடிவங்களையும் சக்தி வாய்ந்த முறையில் பயன்படுத்தியது.ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக...*

"வா! ஓ! ருத்ரா வா!அரக்கனை உன்தலை கொண்டு மோதித்தாக்கு! உன்வலுவான ரத்தம் தோய்ந்த ஆசீர்வாதத்தை என் தலையில் ஏந்துவேன், முழுநிலவு தினம் சிவப்பாகட்டும். எப்போதும் உயிரற்றுப் போனவர்களுக்கும் தினம் தினம் உயிரை அர்ப்பணிப்பவர்களுக்கும் சாவைப்பற்றி அச்சமேது"

*இவ்வாறு 1920ஆம் ஆண்டுகளின் முதல் ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து 1930 ஆம் ஆண்டுகளின் இரண்டாவது சட்டமறுப்பு இயக்கத்திற்கு முன்னேறும் பயணத்திற்கு அடித்தளமிடப்பட்டது; இது ஒரு உயர்ந்த, அரசியல் ரீதியாக மிகவும் முன்னேறிய மற்றும் நன்றாக அணிதிரட்டப்பட்ட அடிப்படையில் நடத்தப்பட்டபோராட்டமாகும். இந்திய வரலாற்று வளர்ச்சியின் முழுப் பாதைக்கும் லெனினியக் கருத்துக்களின் தாக்கம் புதிய வாழ்வையும் திசை வழியையும் கொடுத்தது.*

\- **பெரணமல்லூர் சேகரன்**

# ஜாக்டோ-ஜியோ நிகழ்வுகள்

இடைக்கால நிவாரணம் 20 சதம் 2016 முதல் வழங்க வேண்டும். புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும். காலிப் பணியிடங்களை முழுமையாக நிரப்பவேண்டும். மதிப்பூதியம், தொகுப்பூதியம், காலமுறை ஊதியம் அவுட்சோர் சிங் முறையை ஒழித்து சத்துணவு, அங்கன்வாடி, ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், பகுதிநேர ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவருக் கும் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும். நீட்தேர்வை ரத்து செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது.

### தருமபுரி

அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் பொன்ரத்தினம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற கழகம் மாவட்டத் தலைவர் கௌரன், பட்டுவளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் சிவப்பிரகாசம், நில அளவைத் துறையின் மாநில துணைத் தலைவர் அண்ணா குபேரன், வேளாண்மைத் துறை அமைச்சு பணியாளர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் யோகராசு, வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் கனகராஜ் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

### திருவள்ளூர்

திருவள்ளூர் மீரா திரையரங்கம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட் டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஜி.இளங்கோவன், தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் சங்க மாவட்ட தலைவர் ஞானசேகரன் ஆகியோர் தலைமை தாங்கினார். இதில் ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் இரா.தாஸ், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தி.கலைசெல்வி, தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கழகத்தின் மாநில பொருளாளர் எம்.ஜம்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல், தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட தலைவர் பாண்டியராஜன்,தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் சங்க மாநில தலைவர் சீனிவாசன்,ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ரமேஷ், குப்புசாமி உட்பட பலர் பேசினர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தங்கள் கோரிக்கைகளுக்காக செப்-13 அன்று காத்திருக்கும் போராட்டம் மேற்கொண்ட ஜாக்டோ-ஜியோ அமைப்பை சேர்ந்த அனை வரையும் காவல் துறையினர் கைது செய்தனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் காத்திருக்கும் போராட்டம் மேற்கொள்ள முயன்றனர். அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு உள்ளே செல்ல அனுமதி மறுக்கப் பட்டது. மேலும் ஆட்சியர் அலுவலகத்தின் வெளியே கூட காத்திருக்கும் போராட்டம் நடத்த அனுமதியில்லை என ஜாக்டோ-ஜியோ சார்பில் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான ஊழியர்களை காவல்துறையினர் கைது செய்யப் பட்டனர்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், திருவள்ளூரில் மட்டும் அலுவலக வளாகத்தின் உள்ளே செல்ல கூட அனுமதிக்க வில்லை. நுழைவுவாயில் உள்ள இரும்பு கேட்டையும் அடைத்து விட்டனர். இதனால் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் ஆத்திர மடைந்து அரசிற்கும் எதிராக முழக்கமிட்டனர். இதனை தொடர்ந்து காவல்துறையினர் துரத்தி, துரத்தி கைது செய்தனர். காவல்துறையின் இந்த அராஜக போக்கை தலைவர்கள் கண்டித்தனர்.

### திருச்சி

11.09.2017 அன்று ஜாக்டோ - ஜியோ மாநில மைய முடிவின்படி 07.09.2017 முதல் காலவரை யற்ற வேலை நிறுத்த போராட்டத்தின்படி, போராட்டத்தின் முதற்கட்டமாக 07.09.17 அன்று அனைத்து வட்ட தலைநகரங்களிலும் மறியல் போராட்டம் என அறிவிக்கப்பட்டது. அதன்படி திருச்சி மாவட்டத்தில் திருச்சி மாநகர வட்டக் கிளையின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவ லகம் முன்பு மாபெரும் மறியல் போராட்டம் வட்ட ஒருங்கிணைப்பாளர் (ஜியோ) முனைவர்

கா.பால்பாண்டி தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கலந்து கொண் டார்கள். மறியல் போராட்டத்திற்கு வந்தவர்களை வரவேற்கும் பொருட்டு வட்ட ஒருங்கிணைப் பாளர் (ஜாக்டோ) தங்கமணி வரவேற்புரை ஆற்றினார். வட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா.பால்பாண்டி கோரிக்கைகள் குறித்து தலைமை யுரையாற்றினார். அனைத்து துறைவாரி சங்க நிர்வாகிகள், ஆசிரியர்கள் சங்க நிர்வாகிககள், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் டி.இளங்கோவன், மாவட்ட செயலாளர் கென்னடி, மாவட்ட பொருளாளர் பழனியப்பன் மற்றும் அனைத்து மாவட்ட, வட்டக் கிளை நிர்வாகிகளும் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத் தினை சிறப்பித்தார்கள்.

### திருவாரூர்

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வெ.சோம சுந்தரம் தலைமையில் 19.9.2017 அன்று விளமல் கஸ்தூரிபாய் காந்தி மெட்ரிக்குலேசன் பள்ளியில் நடைபெற்றது. முன்னதாக வருகை புரிந்தவர் களை மற்றொரு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பெ.இரா.ரவி வரவேற்று பேசினார். விளக்கக் கூட்டத்தில் தலைமைச் செயலக சங்க செயலாளர் கு.வெங்கடேசன், தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாநில பொதுச் செயலாளர் க.மீனாட்சி சுந்தரம் ஆகியோர் விளக்கவுரையாற்றினர். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் கோ.வீரமரணி நன்றி கூறினார். இதில் 400 ஊழியர்கள் பங்கேற்றனர்.

### நாகப்பட்டினம்

மாவட்ட ஜாக்டோ - ஜியோ (அரசு ஊழியர் - ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு) சார்பில் கடந்த 07 09 17 முதல் நடைபெற்ற வேலை நிறுத்தம் அதனைத்தொடர்ந்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வேலை நிறுத்தத்திற்கு தடை விதித்தது. அதனை மீறி நடைபெற்ற நடைபெற்ற வேலை நிறுத்தம் நீதிமன்ற ஆணையை மீறியதற்கான வழக்கில் வழங்கப் பட்ட உறுதிமொழியையடுத்து வேலை நிறுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவையடுத்து தமிழக அரசு அறித்த ஊதிய மாற்றமும் ஏமாற்றமும் என்ற தலைப்பில் தமிழக அரசு அறித்துள்ள ஊதிய மாற்றத்தில் உள்ள குறைபாடுகள் மற்றும் அடுத்த கட்ட நிகழ்வுகள் குறித்த விளக்கக் கூட்டம் 20.10.17 மாலை நாகை மாவட்ட ஆட்சியரகம் முன்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பா.ரவி, வி.சரவணன் மற்றும் ஏ.ட்டீ.அன்பழகன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில துணைத் தலைவர் பி.எஸ்.அப்பர், தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற முன்னாள் மாநில முதன்மைச் செயலாளர் உ.சுப்பிரமணியன் மற்றும் உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்க மாநில துணைத் தலைவர் என்.அசோக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார். உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்க மாவட்டத் தலைவர் ஞானசேகரன், பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு மாவட்டச் செயலாளர் இரா.மகேசு, தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாவட்டச் செயலாளர் ஜெக.மாணிக்கவாசகம், ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் எம்.கணேசன், ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் மு.காந்தி, தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் ப.பார்த்தசாரதி, ஆசிரியர் முன்னேற்ச் சங்க மாவட்டச் செயலாளர் பி.ஸ்டாலின், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் இயக்குனர் சங்க மாவட்டத் தலைவர் பிரசன்னா மற்றும் அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாநிலச் செய லாளர் அ.சௌந்தரபாண்டியன் நன்றி கூறினார்.

23.10.17 சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெறவுள்ள விசாரணையைத் தொடர்ந்து 24.10.17 சென்னையில் கூடவுள்ள ஜாக்டோ-ஜியோ உயர்மட்டக் குழு முடிவின்படி அடுத்த கட்ட இயக்கங்களை நாகை மாவட்டத்தில் வெற்றிகரமாக நடத்துவது என முடிவெடுக் கப்பட்டது. முன்னதாக பொறையாரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து பணிமனையில் ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்த 9 தொழிலாளர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

### தருமபுரி

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கூட்டமைப் பின் சார்பில் ஊதிய மாற்றம் குறித்த விளக்க கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. கூட்டமைப்பு தலைவர்கள் ம.சிவக்குமார், கோ.தாமோதரன், டி.செந்தில் குமார், எம்.சுருளிநாதன், ஏ.சேகர், பொன். ரத்தினம், பி.எம்.கௌரன் ஆகியோர் உரை யாற்றினர். ❖

# "இருட்டிலிருந்து"

## ஜெ.மாதவராஜ் எழுதிய புத்தகம் குறித்த விமர்சனம்

**தீ**பாவளி திருநாளை ஒட்டி அனைவரும் தீபாவளி கொண்டாட்டத்தில் திளைத்திருந்த போது கடும் போராட்டத்திற்கு பின்பும், காலமுறை ஊதியமும், 1.1.2016 ஊதியக் குழு நிலுவைத் தொகையும் வழங்காத, அரசின் அறிவிப்பு மனவருத்தத்தை அதிகப்படுத்திய நிலையில் கொண்டாட்டங்களில் நாட்டமில்லாத போது வாசிக்கக் கிடைத்த அரும்பெரும் நூல் தோழர் மாதவராஜ் எழுதிய "இருட்டிலிருந்து".

அன்றைய பொழுதும் அதற்கடுத்த நாளும் கையைவிட்டு நகராமல் தொடர் வாசிப்பிற்கு உதவியது. உலகமயமாக்கலுக்கு பிறகு பல்வேறு தொழிற் சங்கங்கள் தொழிலாளர் உரிமைகளுக்கு தொடர்ந்து போராடி வருகிற நிலையில் அத்தகைய போராட்டங்களை களத்தில் நின்று சந்தித்த களப்போராளியால் எழுதப்பட்ட நூல் இதுவாகும். பாண்டியன் கிராம வங்கியின் ஒர்க்கர்க்ஸ் யூனியனின் சாதாரண உறுப்பினராய் தனது சங்கப் பணியை துவக்கிய மாதவராஜ் இன்று அதன் பொதுச் செயலாளராக பரிணமித் திருக்கிறார்.

பணியில் சேர்ந்து ஒரு மாத காலம் கூட ஆகாத நிலையில் நடைபெற்ற தர்ணா போராட்டத்தில் பங்கேற்றது குறித்தும், அதனால் அவர் பணி புரிந்த தலைமை அலுவலகத்தில் ஏற்பட்ட பிரளயம் படித்து இரசிக்க வேண்டியது மட்டு மல்லாது, நெஞ்சில் இறுத்தி வைக்க வேண்டிய பல போராட்டங்கள், சமகால நிகழ்வுகளை பிரதிபலிப்பதகக உள்ளன. பாண்டியன் கிராம வங்கியின் 344 நாட்கள் போராட்டம் வாபஸ் பெறும்போது தங்கியிருந்த அறைக்கு பணம் செலுத்துவதிலும், சங்க கட்டிடத்தை பராமரிப் பதில் எழுந்த சிக்கல்களையும் விலாவரியாகச் சொல்லியிருப்பதுடன், போராட்டத்தில் கலந்து கொண்ட தற்காலிக அலுவலர்களை விடுத்து அனைவரும் பணியேற்பது என்று எடுக்கப்பட்ட சங்கத் தலைமையின் முடிவை எதிர்த்து ஊழியர் கள் போராட்டத்தை கைவிடாமல் தொடர்வது என்று தெரிவித்த உறுதிப்பாடு, அடுத்த சில மணி நேரங்களில் அதில் மாற்றம் ஏற்பட்டு அனைவரும் பணியேற்கலாம் என்ற முடிவை எட்டியதும் தொழிலாளர் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி யாகவே பதிவு செய்துள்ளார்.

சங்கத்தின் செயல்பாடுகள் எந்த தனிநபரையும் சாராமல் கூட்டு இயக்கமாக பரிணமிப்பதால் ஒருவர் இல்லையென்றாலும், இன்னொருவரின் தோள் அந்தப் பாரத்தைத் தாங்கிட இயல்பாக முன்வந்துவிடும். வெற்றிடங்களை விட்டு வைத்து அவற்றை நிரப்ப காலம் வரும் என சங்கம் காத்திருப்பதில்லை என்ற வைர வரிகள் நமக்கு பல நினைவுகளை ஏற்படுத்துகின்றன.

மேலும், சமகாலப் போக்குகளை அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "ஒரு போராட்டத்தி லேயே அனைத்தையும் முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்ற மனோபாவம் பொதுவாக எல்லோருக்கும் இருக்கிறது. அமைப்பும், அரசும் முற்றிலும் தொழிலாளர்களுக்கு விரோதமானது என்பதும், முடிந்தவரை தொழிலாளர்களை சுரண்டுவது முதலாளித்துவத்தின் இரத்தத்தில் ஊறி இருக்கிறது என்பதும் பலரின் சிந்தனையில் பதியமாட்டேன்கிறது. அவர்களிடமிருந்து ஒரு சலுகை பெறுவதற்கு தொழிலாளர்கள் தொடர்ந்து சலிப்பற்ற போராட்டங்களை நடத்தியாக வேண்டும். தியாகங்கள் செய்தாக வேண்டும்.

ஒவ்வொரு போராட்டத்தையும் அதன் முடிவுகளையும் அனுபவமாக்கிக் கொண்டு அடுத்த அடியினை எடுத்து வைக்க வேண்டும்". எந்தளவிற்கு இது 2016 முதல் ஊதியக் குழு மாற்றத்திற்காக அரசு ஊழியர் சங்கம் எடுத்துவரும் முடிவுகளையும், ஜாக்டோ-ஜியோ செப்டம்பர் 2017 போராட்டங்களையும் பிரதிபலிக்கிறது. தீபாவளி விடுமுறை எனக்கு ஒரு நல்ல நூலை வாசிக்க வாய்ப்பை கொடுத்தது என்பதிலும், இத்தகைய நூல்களை தேர்வு செய்து அளிக்கும் எனது மகனின் நண்பர்களையும் நினைத்து நான் பெருமிதம் கொள்கிறேன்.

- முனைவர் **சு.கிருஷ்ணன்**

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு கல்வித் துறை நிர்வாக அலுவலர்கள் சங்கம்

சங்கத்தின் 4வது மாநில மாநாடு 14.10.2017 அன்று கரூர், புனித தெரசா மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கொடியேற்று நிகழ்வுடன் நடை பெற்றது. சங்கத்தின் கொடியை மாநிலத் தலைவர் பி.எஸ்.அப்பர், அரசு ஊழியர் சங்கக் கொடியினை சங்கத்தின் மாநில துணைத் தலைவர் மு.சுப்பிர மணியன், ஏஐஎஸ்ஜிஇஎப் கொடியினை அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் ஏற்றி வைத்தனர். மாநாட்டிற்கு மாநிலத் தலைவர் பி.எஸ்.அப்பர் தலைமை யேற்றார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தலைவரும், முன்னாள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளருமான ஆர்.முத்துசுந்தரம் திருவுருவப் படத்தினை கரூர் மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் ஐ.ஜான்பாட்ஷா திறந்து வைத்தார். சங்கத்தின் மாநில துணைத் தலைவரும், அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர் சி.ஆர்.ராஜ்குமார் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். வரவேற்புக் குழு தலைவரும், கரூர் மாவட்ட அரசு ஊழியர் சங்கத் தலைவருமான மு.மகாவிஷ்ணன் துவக்கவுரை யாற்றினார். வேலை அறிக்கையினை அ.சேகரும், நிதிநிலை அறிக்கையினை நா.வினோத்குமாரும் சமர்ப்பித்தனர். மாநாட்டை வாழ்த்தி சிஐடியு மாவட்டச் செயலாளர் ஜி.ஜீவானந்தம், அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

சங்கத்தின் மாநில நிர்வாகிகள் சி.செல்வ குமார், பி.திருப்பதி, பொன்.ஜெயராம், பி.ஆர்.இளங்கோ ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினர். அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு சிறப்புரையாற்றினார். வரவேற்புக் குழு செயலாள ரும், தமிழ்நாடு கல்வித் துறை நிர்வாக அலுவலர் கள் சங்கத்தின் மாவட்டச் செயலாளருமான கோ.இலட்சுமணன் நன்றி கூறினார்.

மாநாட்டில் 250 அரசு ஊழியர் சங்க உறுப்பினர் சந்தாவை மாவட்ட துணைத் தலைவர் க.சிவா, 200 அரசு ஊழியர் மாத இதழுக்கான சந்தாத் தொகையினை மாவட்டப் பொருளாளர் ஆர்.கணேசன் அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் மு.அன்பரசுவிடம் வழங்கினர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 750க்கும் மேற்பட்ட கல்வித் துறை ஊழியர்கள் பிரதிநிதிகளாக பங்கேற்றனர். ஓய்வு பெற்ற மாநில நிர்வாகிகளுக்கும், சிறப்பு விருந்தினர்களுக்கும் நினைவுப் பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. கல்வித் துறையில் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் நிலுவையில் உள்ள கோரிக்கைகளை வலியுறுத்தி 12.12.2017 அன்று சென்னை பள்ளிக்கல்வி இயக்கக வளாகத்தில் “பெருந்திரள் முறையீடு” போராட்ட இயக்கத்தினை நடத்துவது என அறைகூவல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## சாலைப் பணியாளர் சங்கம்

அரசு விதிப்படி வழங்க வேண்டிய பணப் பலன்கள் வழங்க கோரி சாலைப் பணியாளர்கள் பங்கேற்ற ஆர்பாட்டம் மேட்டூரில் 04.10.2017



அன்று உதவி கோட்ட பொறியாளர் அலுவலக முன்பு மாலை 5.30 மணியளவில் வட்ட துணை தலைவர் பி.முருகன் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வட்ட செயலாளர் கே.அர்ச்சுனன் விளக்கவுரை ஆற்றினார். அரசு ஊழியர் சங்கத்தின் வட்டத் தலைவர் கே.கலை யரசு, வட்ட கிளை பொருளாளர் சி.காமராஜ், முன்னாள் வட்ட கிளை தலைவர் பி.சண்முகம், முன்னாள் மாவட்ட செயலாளர் எஸ்.செல்லசாமி, எடப்பாடி கோட்டத் தலைவர் மு.தங்கராசு ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில துணைத் தலைவர் து.சிங்கராயன் நிறைவுரையாற்றினார். வட்ட பொருளாளர் ஆர்.மீனாட்சிசுந்தரம் நன்றி கூறினார்.

## தருமபுரி

புதுவாழ்வு திட்டப் பணியாளர்களுக்கு நிரந்தர பணி வழங்கக் கோரியும், புதுவாழ்வு திட்டத்தில்

தொடர்ந்து பணியாற்றும் பணியாளர்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும், ஜூலை 2017-க்குள் அனைவருக்கும் பணி என்ற மாநில நிர்வாகம் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும், மக்கள் அமைப்புகளை தொடர்ந்து செயல்படுத்த நிதி ஒதுக்க வேண்டும், தருமபுரி மாவட்டத்தில் புதிய திட்டமான டிஎன்ஆர்டிபியை செயல்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு புதுவாழ்வு திட்ட அனைத்து பணிகள் நலச்சங்க சார்பில் கவன ஈர்ப்பு உண்ணாவிரதம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது.

இந்தப் போராட்டத்திற்கு மாநில செயலாளர் எஸ்.சிவக்குமார் தலைமை வகித்தார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் மாவட்ட துணைத் தலைவர் யோகராசு, நில அளவைத் துறை ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் அண்ணா.குபேரன், புதுவாழ்வு திட்ட சங்க நிர்வாகிகள் என்.பிரதீப், பி.ஜெயக்குமார், எம்.சுமதி உள்ளிட்ட பலர் கோரிக்கையை விளக்கி பேசினர்.

## வாழ்த்துக்கள்

கரூரில் நடைபெற்ற தமிழ்நாடு கல்வித் துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் மாநில மாநாட்டில் மாநிலத் தலைவராக அ.சேகர், பொதுச் செயலாளராக பொன்.ஜெயராம், பொருளாளராக நா.வினோத் குமார், துணைத் தலைவர்களாக சி.ஆர்.இராஜ் குமார், பி.ஆர்.இளங்கோ, சி.செல்வகுமார், பி.திருப்பதி, மாநிலச் செயலாளர்களாக சி.ஜெ.குறிஞ்சி வேலன், ச.விஜயமனோகரன், ம.எழில் இளம்வழுதி, பா.பேச்சியம்மாள், தணிக்கையாளராக ஆர்.கஸ்தூரி ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப் பட்டனர். தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# வாசகர் கடிதம்

முன் அட்டையில் நமது போராட்ட புரட்சி வீரன் தோழர் ஆர்.முத்துசுந்தரம் அவர்களின் படத்திறப்பு நிகழ்வு சோகத்தினையும், மனவேதனையையும் எடுத்துக் காட்டி கண்ணீரை வரவழைத்தது. சூடா ஒரு கோப்பை சூப், இடைவிடாத போராட்டம் உடைத்தெறியப்பட்ட உதாசீனங்கள், நேதாஜி அறிவித்த இந்திய அரசு, போராட்டங்களுக்கு எதிராக நீதிமன்றங்கள் கருத்துரைப்பது ஏற்புடையதா? சீசரின் மனைவியும் சீதையின் கணவனும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஆகிய அனைத்து கட்டுரைகளும், ஜாக்டோ-ஜியோ போராட்டக் குழுவினரின் முழு விவரம் குறித்து வெளியிட்டவை அனைத்தும் சிறப்பாக இருந்தது.

- **ரா.தட்சிணாமூர்த்தி**,
கடலூர்

அக்டோபர் 2017 மாத இதழ் அட்டையின் படங்களில் தோழர்களின் உணர்வுகளை காட்டியது. நமது போராட்டம் வீண்போகவில்லை, வீண்போக விடமாட்டோம் என்ற பொது செயலாளர் அவர்களின் கட்டுரை அருமை. கடைசி காலத்திலாவது கொஞ்சம் நிம்மதியாக இருக்கலாம் என்றுதான் அரசு பணிக்கு வருகிறோம். நிகழ் காலத்தில் காலிப் பணியிடங்களின் வேலைகளையும் சேர்த்துத்தான் பார்க்க வேண்டியுள்ளது. அப்படி இருக்க நம்மை உமி என நினைத்து ஊதி தள்ளி விடலாம் என நினைக்கிறார்கள். உமியின் உள்ளே இருக்கும் கனல் ஊரின் கண்களுக்கு தெரியாது. நமது சங்கத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் தோழர் ஆர்.எம்.எஸ் அவர்களை நினைத்து பார்க்காமல் கடக்க முடியாது. அவர் ஆற்றிய உரைகள் ஆவணமாக்கப் பட வேண்டும். மன நிறைவோடு பணி நிறைவுக்குப் பிறகு வாழ வேண்டும் என்றுதான் தெருவில் நின்று போராடுகிறோம் என்பதை சி.பி.எஸ்-ல் உள்ள தோழர்கள் உணர்ந்து இனியாவது போராட்ட களத்திற்கு வரவேண்டும்.

- **சி.பாலசுப்ரமணியன்**,
நாகப்பட்டினம்.

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com